தொகுதி 7] [பகுதி 1

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு ஞ சித்திரை மீ
APRIL 1942

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்
520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைக் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 42.

செங்கற்பட்டு — Ch. 31, 33.

வட ஆற்காடு — N. A. 56.

தஞ்சாவூர் — Tan. 34, 35, 74, 78, 79, 80, 81.

திருச்சி — Tri. 50, 56.

ராமனுதபுரம் — Rd. 15, 52, 54.

மதுரை — Md. 49 — 82.

திருநெல்வேலி — Tin. 1, 69, 72, 73, 76, 83.

சேலம் — S. 57, 58, 60.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்த ஆபிஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும், மணியார்டர் கூபன் களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாய் மொழி கற்பித்தல் ... .... .... —M. சுப்பிரமணியம் | 1 |
| 2. | ஆரம்பப் பாடசாலை உபகரணங்கள் .... .... —V. நடராஜன், D. E. O., சேலம் | 8 |
| 3. | அனுபவக் கனிகள் .... .... —P. N. கல்யாணசுந்தரம் | 16 |
| 4. | கலையும் கைத்தொழிலும்—XI .... .... —R. M. Savur | 21 |
| 5. | **33rd Provincial Educational Conference, Vellore....** | 23 |
| 6. | **List of Delegates** .... .... .... | 25 |
| 7. | செய்தித் திரட்டு .... .... .... | 28 |
| 8. | பத்திராதிபர் குறிப்புகள் ... ... .... | 32 |



புதிய பாடத் திட்டத்துக் கேற்ப இயற்றிய

**எமது புதிய நூல்கள்**

எமது தமிழ் புத்தகங்கள்

**நமது தாய்மொழி வாசகம்**

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், B.A., L.T.,

| | |
|---|---|
| முதற் புத்தகம் .... | அணா 2½ |
| இரண்டாம் புத்தகம் .... | ,, 3½ |
| மூன்றாம் புத்தகம் .... | ,, 4½ |
| நான்காம் புத்தகம் .... | ,, 5 |
| ஐந்தாம் புத்தகம் .... | ,, 6 |

எமது கணித புத்தகங்கள்

**புது முறை கணிதம்**

ஆசிரியர்

M. S. சுந்தரேச்வரன், M.A., L.T.,

| | |
|---|---|
| முதற் புத்தகம் .... (ஆறாம் வகுப்பிற்குரியது) | அணா 10 |
| இரண்டாம் புத்தகம் .... (ஏழாம் வகுப்பிற்குரியது) | ,, 12 |
| மூன்றாம் புத்தகம் .... (எட்டாம் வகுப்பிற்குரியது) | ,, 12 |

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,**

புத்தக வியாபாரிகள்,

நெ. 102, மோபரீஸ் ரோடு, ஆள்வார்பேட்டை, P.O., சென்னை.

# பொது ஞான சாஸ்திரம்




முதல் பாரத்திலிருந்து
ஆரும் பாரம் வரையிலுள்ள மாணவர்களுக்கு

**புதிய ஸிலபஸிற்கேற்ப**

டி. ஏ. ராமய்யர், வி. ஸ்ரீனிவாசன்,
எஸ். ஸ்வாமிநாதன் அவர்களால்
எழுதப்பட்டது

| | பக்கங்கள் | | சித்திரங்கள் | விலை |
|---|---|---|---|---|
| முதல் புத்தகம் | 134 | — | 90 | அணு 9 |
| இரண்டாம் புத்தகம் | 128 | — | 78 | ,, 10 |
| மூன்ரும் புத்தகம் | 154 | — | 92 | ,, 12 |
| நான்காம் புத்தகம் | 186 | — | 98 | ,, 12 |
| ஐந்தாம் புத்தகம் | 420 | — | 276 | ரூ. 1-8 |

குறிப்பு : பார்க்க விரும்பும் தலைமை உபாத்தியாயர்களுக்கு மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும்

## ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்

---

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ | விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, | ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, | ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, | ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, | ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# பாலர் கல்வி

| | | |
|---|---|---|
| தொகுதி 7 | 1942 ௵ ஏப்ரல் ௴<br>சித்ரபானு ௵ சித்திரை ௴ | பகுதி 1 |


## தாய்மொழி கற்பித்தல்


**M. Subramaniam**, *L. M. C. High School, Shiyali*


### IX. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இலக்கியம்

**கீழ்வகுப்பு மாணவர்களும் இலக்கியமும்**

கீழ்வகுப்பு மாணவர்கள் இளம்பிராயம் உள்ளவர்களாதலால் இலக்கியத்தின் பல நுட்பங்களையும், கலையின் விசேஷ அம்சங்களையும் அவர்கள் நன்றாக அறிந்துகொள்ளமாட்டார்கள். உணர்ச்சிவாயிலாக மனத்திற் பதிந்த விஷயங்களைச் சிந்தித்து தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களை வெளியிடும் சக்தியும், அவர்களுக்குக் கிடையாது. சொல்லிக் கொடுத்ததை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் திறமை அதிகம் வாய்ந்தவர்கள். இளகிய மனமுடையவர்களாதலால் சந்தோஷம் அனுதாபம், விசனம், முதலிய உணர்வுகள் வெகு சீக்கிரத்தில் அவர்களுக்குத் தோன்றக்கூடும். ஒரு கலைஞனுடைய கற்பனையின் தன்மை, வரம்பு, உண்மை, போக்கு முதலியவற்றைக் கவனிக்காமல், கற்பனை உருவங்களில் அதிக நம்பிக்கைகொண்டு அவற்றை வெகு இன்பத்தோடு நினைந்து நினைந்து மகிழ்ச்சியடைவார்கள். பெரிய கலைஞர்களால் ஆக்கப்பட்ட விசேஷ கற்பனை உருவங்களையும் தங்கள் இஷ்டப்படி மாற்றியும், கூட்டியும், குறைத்தும், பெருக்கியும் நினைக்கக்கூடிய சக்தி அவர்களுக்கு உண்டு. வருணனை முதலியவற்றில் அடங்கியுள்ள ஒவ்வொரு சொல்லும் ஒரு பொருளையோ ஒரு உருவத்தையோ தங்கள் மனக்கண் முன்பாகக் கொண்டுவந்தால் அதில் அதிக சந்தோஷமடைவார்கள். எளிய நடையிலும், கதை இலக்கியங்களிலும் அவர்களுக்கு அதிக ஆவலுண்டு. எனவே பொருளின் உருவங்களை வெகு சீக்கிரத்தில் மனத்தில் பதியச்

செய்யும் சிறு வருணனைகளும், கற்பனைசக்தியை தங்கள் இஷ்டப்படி செய்யவல்ல சிறு நாடகங்களும், அல்லது கதைகளும், பயங்கரம் இல்லாத அவர்களுடைய அனுபவத்திற்கு ஒத்தவாறு எழுதப்பட்ட விஷயங்களும், படிக்கும்போது உடலை அசைத்து கிளர்ச்சி தரும்படியான இசை நிறைந்த இலக்கியப்பகுதிகளும் அவர்களுக்கு உற்சாகமூட்டு மாதலால், அவற்றை அதிகமாகத் தந்து கலை இன்பவாயிலாக அவர்களுக்கு இலக்கியச் சுவையை ஊட்டவேண்டும்.

### உயர்தர வகுப்புக்களில் இலக்கியம்

மாணவர்களும் வளர்ந்துகொண்டே வருகின்றார்கள். அறிவிலும், அனுபவத்திலும், சிந்தனைசக்தியிலும், ஒப்புநோக்கும் தன்மையிலும், இலக்கிய பாகத்தைச் சீர்தூக்கி ஆராய்ந்து அறியும் விதத்திலும்கூட அவர்கள் படிப்படியாக வளர்ந்துகொண்டே வருகின்றார்கள். இந்த நிலையில் இலக்கியக் கலையின்பத்தை அடையும் விதமும் வேறுகின்றது. இலக்கியத்தின் புறம்பான விஷயங்களில் அதிக ஆர்வங்காட்டாமல், உட்பொருட்களைக்கண்டு அறிந்து அதனுல் இன்பமடைய அவர்கள் ஆசைகொள்ளுகின்றார்கள். இலக்கியத்தின் மூலாதாரப் பொருட்களாகிய மனித வாழ்க்கையில் ஏற்படும் பெரிய சம்பவங்களையும், அவற்றின் உட்கருத்தினையும் அறிந்துகொள்ள மனமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். பெரிய கலைஞர்களுடைய உள்ளுணர்வால் உருவாகி வெளித் தோன்றும் செய்யுட்கள், கட்டுரைகள், சிறு கதைகள், பெருங் கதைகள் நாவல் போன்ற நவீனக் கதைகள் ஆகிய இவை எல்லாம் இவர்களுக்கு விசேஷச் சுவையையும் பொருளையும் கொடுக்கின்றன. ஒவ்வொரு மாணவனும் ஓர்விதமாக இலக்கியக்கலையின் நுட்பங்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல் தனித்தனியே நிதானித்து சுயமான அபிப்பிராயத்தை வெளியிடும்படியான மனப்பக்குவமுள்ளவனுக இருக்கின்றான். கலையின் வரைபொருளையும் (Standard) அதன் விசேஷ தன்மையையும் (Special features) நிர்ணயிக்க இந்த நிலை மாணவனுல் கூடும். இலக்கியம் தோன்றினதற்கு அடிப்படையாகவுள்ள பெரிய சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளையும், அவை எப்படி கலைஞனுடைய கற்பனையால் எப்படி உருவாயின என்பதையும் அறிய விரும்புகிறான். எனவே இத்தகைய மனமுதிர்ச்சி அடைந்த மாணவனுக்கு இலக்கியம் கற்பிக்கும்போது முதன்முதல் இலக்கியக் கலையின் மூலாதாரப் பொருட்களையும் (Fundamental Elements of Literary Art) அவை விருத்தியாவதற்குரிய விருத்தாந்தங்களையும் அவற்றால் மாணவர்களுக்கு ஏற்படும் தனிச் சுவையையும் அவனுக்கு உணர்த்திக் காட்டவேண்டும். இலக்கியத்தின் மூலப்பொருட்கள் எவை?

### இலக்கியக்கலையின் மூலப்பொருட்கள்

இலக்கியக் கலையின் மூலப்பொருட்கள் இருவிதப்படும். மனித வாழ்க்கையின் விசேஷ சம்பவங்களும், மனிதர்களுடைய நினைப்பு,

செய்கை முதலியவற்றின் காரணங்களும், அவர்களின் சுபாவங்களும், ஆகிய இவை வெளிப்படையான மூலப்பொருளாகும். இவற்றினையே பெரும் புலவர்கள் ஆதாரமாகக்கொண்டு தங்கள் கலையை வெளிப்படுத்துகின்றார்கள். எல்லோராலும் சாதாரணமாகக் காணக்கூடிய விஷயங்களை நன்றாகவும் பொருள்படவும் உற்றுநோக்கி அவற்றைக் கற்பனைசக்தியால் உருவாக்கி அவை எக்காலத்திலும் அழியாமல் நிலைநிற்கச் செய்வது கலைஞனுடைய சக்தி. இது அகப்பொருளாகும். எனவே உலகப் பொருளோடு சேர்ந்த மனித வாழ்க்கையின் பொருள் கவிஞனுடைய உள்ளத்தில் தாக்கிக் கலையுருவமாகின்றன. இதை மாணக்கன் நன்றாக அறிய வேண்டும்.

## புலவர்களுடைய அகப்பொருள்

சிறந்த புலவர்களுடைய கலைகளில் நான்கு முக்கியமான பொருட்களைக் காணலாம். வெளியுலகத்தில் தோன்றி நிற்கும் பொருட்களை விசேஷ நோக்கத்தோடு கருதி அவற்றைத் தகுந்தமுறையில் இன்பந் தரும்வண்ணம் சீராக அமைத்து வைப்பது கலைஞனுடைய கருத்துப் பொருள் அல்லது மனத்தன்மையாகும் (**Intellectual or mental Characteristics**) மானிட வாழ்க்கைச் சம்பவங்களில் நிறைந்திருக்கும் உயர்வு, தாழ்வு, காதல், வெறுப்பு, சாந்தம், வெகுளி, சிரிப்பு, விசனம், அழுக்காறு, பேராசை, சினேகம், தயை, பொறுமை, பகை முதலிய குணங்கள் எல்லாம் கலைஞனுடைய உள்ளத்தைத் தூண்டிப் பேருணர்ச்சிகளைப் பிறப்பிக்கின்றன. இவ்வுணர்ச்சிகளெல்லாம் கலையுருவம்பெற்று வெளியாகும்போது நம் உள்ளத்தை அசைக்கின்றன. இத்தகைய பேருணர்ச்சிப் பொருள் (**Emotional element**) இரண்டாவதாகும். மூன்றாவதாக உலக சம்பவங்களையும் குறித்த மனிதர்களின் குணகுணங்களையும் அப்படியே வெளியிடாமல் அவற்றை மாற்றி அழகாக உருவாக்கிப் பிறர் களிக்கும்படி செய்வது கலைஞனுடைய கற்பனைசக்தியேயாகும். இதற்கு கற்பனைப்பொருள் (**Imaginative Element**) என்று பெயர். இலக்கியத்தைப் படிப்போர்களுடைய உள்ளம் இன்பத்தில் மூழ்கி இருப்பதற்குக் காரணம் புலவருடைய அழகிய நடையேயாகும். இந்த நடை (**Style**) நான்காவது பொருளாகும். எனவே மனித வாழ்க்கையின் சம்பவங்கள், மனித சமூகத்தின் சுபாவம், கலைஞனுடைய கருத்து, அவருடைய கற்பனைத்திறன், பேருணர்ச்சிப்பொருள், நடை ஆகிய இவைகளே இலக்கியக் கலையின் மூலப் பொருட்களாகும்.

## முதற் கற்க வேண்டியவை

இலக்கிய மூலப்பொருள்களின் முழுத்தன்மையையும் நன்றாக அறிந்து கலைஞருடைய கருத்துக்களையும் பிறவற்றையும் ஒருவன் தெரிந்துகொள்ளவேண்டுமானால், அவன், முதல் நூல் அல்லது மூல நூலைக் (**Original Works**) கற்க வேண்டும். சிலர் மூலநூற்களைப் படிப்

பதற்குப்பதிலாக, பிறரால் எழுதப்பட்ட இலக்கிய விமர்சனங்களையும், அபிப்பிராயங்களையும் தங்கள் மனத்தில் அமைத்து மேல் நோக்காகக் கொண்டு புலவர்களுடைய நூற்களைப் படிக்கக்கூடும். இது தவறு ஏனென்றால் ஒரு புலவரின் முதல் நூல் அவருடைய ஒப்பற்ற "செல்வப் புதல்வன்". இந்த நூலில் ஆக்கியோனுடைய முழு ஜீவனும் அடங்கியுள்ளது. ஆகவே மூலநூற்களையே முதலில் படிக்கவேண்டும்.

## முதல் நூல் ஏன் படிக்கவேண்டும்?

புலவர், தான் நேரில் கண்டு அறிந்த விஷயங்களை யாதொரு குற்றமும் குறையும் இல்லாமல் தன் கற்பனு சக்தியால் கலையுருவாக்கி வைப்பது சிறந்த நூலாகும். இந்நூலில் புலவரின் உணர்சிகள், அனுபவங்கள், மனோபாவங்கள், உயர்ந்த லக்ஷியங்கள். ஆகிய இவை அதிகமாக நிறைந்து இருப்பதோடு அவருடைய பௌருஷமும் (**Personality**) வெளியாகும். சிலப்பதிகாரம் என்னும் நூலில்தாம் நேரில் கண்ட விஷயங்களை இளங்கோவடிகள் வெகு அழகாகவும் திறமையோடும், கலை உணர்ச்சி நிறைந்ததாயும், எழுதி இருக்கிறார். இதைப் படிக்கும்போது நாம் உயர்ந்த கலை இன்பத்தை அடைகிறோம். உயர்ந்த தர்ம நெறிகளையும், அரசியல் இலக்ஷியங்களையும், அறிவதோடு விசேஷ வருணனைகளையும் சோழ, சேர, பாண்டியநாடுகளின் சிறப்புகளையும் காண்கின்றோம். எனவே மாணவர்கள் இலக்கியத்தில் நிலையான கலை இன்பம் பெறவேண்டுமென்றால், ஒரு மொழியிலிருந்து வேறு மொழியில் பெயர்த்து எழுதப்பட்ட நூற்களையும், பெரிய நூற்களின் விமர்சனங்களையும், சுருக்கங்களையும் படிக்காமல், புலவர்களால் எழுதப்பட்ட சொந்த முதல் நூற்களையே படிக்கவேண்டும். இனி இலக்கியத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுவதற்கு முதல் காரணமான தாய்நாட்டுச் சரித்திரத்தை ஏன் படிக்கவேண்டும் என்பதைப் பார்போம்.

## இலக்கியமும் தாய் நாட்டுச் சரித்திரமும்

ஒரு இலக்கியத்தின் தன்மை அது தோன்றியதற்குக் காரணம், அதன் கலை அமைப்பு, நடையின் போக்கு அதன் ஒப்பற்ற சிறப்பு, ஆகிய இவற்றைத் தெளிவாக விளக்கிக் காட்டுவது. இலக்கியம் தோன்றின நாட்டின் சரித்திரமாகையால் அதை ஒவ்வொரு மாணவனும் நன்றாகக் கற்கவேண்டும். இலக்கியம் எழுதப்பட்ட காலத்தின் தன்மை இலக்கியத்தில் ஒருவாறு சுட்டிக் காட்டப்பெற்றிருப்பினும், அவை கலை விசேஷம் பெற்றிருக்குமாகையால், முழு உண்மையும் நமக்குப் புலப்படாது. இக்கலைவிசேஷத்தை நன்றாக, சரித்திரம் விளக்கிக்காட்டக்கூடும். மேலும் ஒரு நாட்டினரின் புறமான (**Outer Civilization**) நாகரிகத்தை உண்மையாக விரித்துக்கூறுவது சரித்திரம்தான். ஒரு நாட்டினரின் பழக்க வழக்கங்கள் அரசியல் விஷயங்கள், அரசர்களின் வெற்றி தோல்விகளாகிய பெரும் சம்பவங்கள், சமய இயக்கங்கள், உயர்வு தாழ்வின் காரணங்கள்

ஆகிய இவை சரித்திரங்களில் நன்றாக எழுதப்பட்டு இருக்கும், இச்சரித்திர அறிவு, புலவருடைய இலக்கியக்கலை உயர்வை விளக்கிக்காட்டும். தமிழ் இலக்கியத்தில் "புறப்பொருளில்" அரசர்கள் முதலியோரின் புறம்பான செய்கைகளைப்பற்றி எழுதப்பட்டு இருக்கின்றன. மாந்தர்களுக்கு இயல்பான காதல் முதலிய உள்ளக் கருத்தினை, "அகப்பொருள்" என்னும் தலைப்பின் கீழ் புலவர்கள் அமைத்து இலக்கியங்கள் செய்துள்ளார்கள். ஒரு குறிக்காலத்து மனிதர்களுடைய உள்ளக் கருத்தினையும், பழக்க வழக்கங்களையும், மனத்தன்மையையும், வாழ்க்கையின் அனுபவங்களையும், அறியவேண்டுமானால் பெரும்புலவர்களுடைய இலக்கியங்களே அதற்கு உதவியளிக்கும். இதற்கு சரித்திரம் அடிப்படையாக இருக்கிறது. மேலும் உயர்ந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கு, விசேஷ சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளே காரணமாதலால் இந்தப் புறநிகழ்ச்சிகள் புலவருடைய அகமாகிய உள் உணர்ச்சியை மேல் நோக்கி எழும்படி செய்கின்றன. செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடியதற்கும், சேக்கிழார் பெரிய புராணம் எழுதியதற்கும் பலபுலவர்கள் சேர்ந்து பத்துப்பாட்டு புறநானூறுபோன்ற நூற்களை எழுதினதற்கும், சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளே காரணமாகும்.

### சமூகமும்—இலக்கியமும்

நாட்டின் சரித்திரம் எவ்வாறு இலக்கியத்தின் முழு விசேஷத்தையும் வெளிப்படையாகத் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கின்றதோ அவ்வாறே இலக்கிய முறை, தர்மங்கள் ஆகிய இவை எல்லாம் அது உண்டான ஜன சமூகத்தின் தன்மையைப் பொருத்ததாய் இருக்கின்றன. தற்கால சமூகத்தையும் அதன் நாகரிகத்தையும் தற்போதுள்ள இலக்கியங்கள் காட்டுகின்றன. இம்மாதிரியே ஒவ்வொரு இலக்கிய சகாப்தமும், ஒரு சமூக சகாப்தத்தை விளக்குகிறது. ஒரு குறித்த காலத்தில் வாழ்ந்திருந்த ஜனசமூகத்தின், சமயக்கொள்கை, அனுஷ்டானங்கள், ஒழுக்க விதிகள், மனப்போக்கு, செய்கைத்தன்மை முதலியன நன்றாகத் தெரிந்தால் அக்காலத்தில் ஏற்பட்ட இலக்கியத்தின் பெருமையை அறிய முடியும். உதாரணமாக கூலவாணிகன் சாத்தனார் எழுதிய "மணிமேகலை" என்னும் காப்பியத்தில் "நாகர்" என்னும் ஒரு சமூகத்தினருடைய வாழ்க்கையை வெகு அழகாக வருணித்துக்காட்டுகிறார். "சக்ரவாளக் கோட்டக்காதை" "சமயக் கணக்கர் தந்திரம் உரைத்தகாதை" என்னும் அத்தியாயங்களில், பண்டைக் காலத்து பழக்க வழக்கங்கள், சமய ஒழுக்கங்கள் ஆகிய இவை நன்றாகக் கூறப்பட்டு இருக்கின்றன. இவற்றை அறிய அக்காலத்து சமூக சரித்திர அறிவு இருந்தால் மிகவும் விசேஷமாக இருக்கும். இவ்விதமாகவே கம்பர் இராமாயணம் எழுதிய காலத்துச் சமூகமும் வான்மீகி காலத்துச் சமூகமும் வித்தியாசப்படுகின்றன. இவ்விரு நூற்களும் ஒரு தலை மகனைக் குறித்ததேயாயினும் அவற்றில்

கண்டுள்ள சமூகதர்மங்கள் வேறாக இருக்கின்றன. ஆகையால் பெரும் புலவர்களின் இலக்கியங்களை நன்றாகச் சுவையோடு அறிய அவை தோன்றின காலத்து சமூக சரித்திர அறிவும் நமக்கு வேண்டும். இக்காரணம் பற்றியே தமிழ்ப்புலவர்கள் நிலங்களையும் ஜனங்களையும் அவர்களுடைய சமூக வாழ்க்கையையும், குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் என வகுத்திட்டார் போலும்.

## புலவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரம்

புலவரும் ஒரு மனிதராவர், "இவர் சாதாரண மனிதரைப்போல் பிறந்து வளர்ந்தவராக இருப்பினும் இவரிடம் காணும் விசேஷ சக்தி எப்படி உண்டாயிற்று? இவர் வாழ்ந்துவந்த காலத்தில் நாட்டின் புறநிலைகள் எவ்வாறு இருந்தன? இந்நிலைமைகளை இவர் எவ்வாறு நோக்கினார்? அல்லது அவை இவருடைய மனோவிருத்தியையும் கலையையும் எப்படி பாதித்தன? புறநிலைமைகளால் பாதிக்கப்பட்ட இவருடைய அகம் எப்படிக் கலையின் மூலமாக வெளியாகின்றது? இவருடைய கற்பனைகளில் எவ்விதமான சொந்த அனுபவங்கள் சூக்ஷ்மமாக மறைந்திருக்கின்றன? அல்லது புலவர்கள் தங்களை வெளியாக்கிக் கொள்ளாமலே எவ்விதமாய் தங்கள் அனுபவங்களை கற்பனா சக்தியால், பிறர் அறியாவண்ணம் சொல்கின்றார்கள்? இவர் வாழ்ந்திருந்த காலத்துச் சமூகம் இவரை எப்படி மதித்தது. இவருடைய கொள்கைகளை எப்படி ஆதரித்தது அல்லது மறுத்தது? இவர் சமூகத்தை எந்த நிலையிலிருந்து நோக்கினார். சமூக தர்மங்கள், அனுஷ்டானங்கள், தெய்வத்தைப் பற்றிய கொள்கைகள் அல்லது நம்பிக்கைகள் இயற்கையை வருணிக்கும் சக்தி, ஆகிய இவை எந்த அளவில் இவரிடத்தில் நிறைந்திருந்தன? இவருக்குத் தம்முடைய வாழ்க்கையில் நேர்ந்த இன்பதுன்பங்கள் கஷ்டநிஷ்டூரங்கள் யாவை? இவற்றால் இவருடைய கலைத்திறன் எப்படி பாதிக்கப்பட்டது?" ஆகிய இவ்விஷயங்கள் நமக்குத் தெரிந்தால் அவரால் இயற்றப்பெற்ற நூலின் அருமை பெருமை விளங்கும். இதற்காகத்தான் ஒரு புலவருடைய ஜீவிய சரித்திரம் இலக்கியம் கற்கும் மாணவனுக்கு இன்றியமையாதது.

## கலைஞனுடைய உள்ளத்தை அறிவது எப்படி?

ஒரு கலைஞனுடைய உள்ளத்தை ஒருவன் நன்றாக அறியவேண்டுமானால் அவர்பால் நிறைந்த பிரேமையும், அனுதாபமும், விசேஷ நன்மதிப்பும் வேண்டும். ஒவ்வொரு புலவரிடத்திலும் ஒரு தனிக் குணம் உண்டு. இதை நாம் நன்றாக அறிய அப்புலவர் நிலைமையிலிருந்தே பார்க்க வேண்டும். நம் கொள்கைகளையும், நம் மனப்போக்கையும், முதல் நிலையில் வைத்து ஒரு புலவருடைய கலைச்செல்வத்தை நோக்கிப் பார்ப்பது சிறந்ததன்று. தர்மங்களைப்பற்றிய கொள்கைகளும் கலை லக்ஷணங்களைப் பற்றி அபிப்பிராயங்களும், சமூக வாழ்வின் சீலங்களும்

சில பகுதியினரது ஒழுக்க விதிகளும் பிறவும் அவ்வப்போது மாறிக் கொண்டே வருகின்றன. அந்தந்த காலத்துப் புலவர்கள் அந்தந்த காலத்து விசேஷங்களை மறைவாகச் சொல்லாமல் இருக்கமாட்டார்கள். இவர்களுடைய கூற்றுக்களையும் கலையையும் நம்முடைய எண்ணப்படி பார்க்காமல், அப்புலவர் உள்ளத்தில் புகுந்து அவர் நினைத்ததுபோல் நினைத்து, அவருடைய உணர்ச்சி கற்பனை முதலியவற்றில் அனுதாபத் தோடு ஈடுபட்டால் தான், நமக்கு அவர்களுடைய முழு உள்ளமும் தெரி யும். மேலும், புலவரின் முழு உள்ளத்தையும் நன்றாக அறிய விரும்பு வோர், அவருடைய நூற்களை எல்லாம் வரிசைக் கிரமமாகப் படிக்க வேண்டும். படித்த பின்னர், விசேஷக் குறிப்புக்களை எழுதிக்கொண்டு, அவரால் எழுதப்பெற்ற முதல் நூலுக்கும் இடை கடை நூற்களுக்கும் உள்ள பேதா பேதங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். இதனால் புலவரின், கருத்து வளர்ச்சி நடையமைப்பு வளர்ச்சி, கற்பனைப்போக்கு முதலியனவும் தெரியும்.

### உண்மையான முடிவு

ஒரு கலைஞனுடைய கலைத்திறன், தன் கலையை ஒளித்துவைப்பதே யாகும். இதைக் கண்டு அறிந்து இன்பம் அடைவதற்குப் பதிலாக, கஷ்டத்தை அடைவோமானால், இலக்கியத்தால் நமக்குப் பயனில்லை. எனவே நம்முடைய முயற்சி ஒரு அளவோடு இருப்பதேயாயினும், கலைப்பொருட்களை கருத்துப் பொருளெனக் கொள்ளாமல், கற்பனைப் பொருளெனக் கொண்டு களிப்படைய வேண்டும். இலக்கியப் பயிற்சி யினால் நம் உள்ளம் சீரடைந்து, மனுஷகுணம் மிருகக் குணம்போல் ஆகாமல், உயர்ந்த நிலையில் நின்று, இவ்வுலகத்தைப் படைத்த எல்லாம் வல்ல இறைவனிடம் நாடுமாயின் இலக்கியக் கலையின் சிறப்பும் அழியா மல் இருக்கும்.

(தொடரும்.)

# ஆரம்ப பாடசாலை உபகரணங்கள்

(By V. Natarajan, D. E. O., Salem.)

போது :—ஒவ்வொரு வகுப்பிலும் குப்பைகள் போட ஒரு கூடை. கிழிந்த காகிதங்கள், கடலைத்தோல் முதலியவற்றை இக்கூடைகளில் பிள்ளைகள் போடப் பழக்கம் செய்யவும். தினமும் காலை மாலை இரு நேரங்களிலும் இக்கூடைகளில் சேர்ந்ததை தோட்டத்தில் குப்பைக் குழியில் கொட்டவும்.

எண்ணெய், சீப்பு, கண்ணாடி, வாளித்தண்ணீர் முதலியவைகளை வைத்து அழுக்குள்ள பிள்ளைகளின் அழுக்கை நீக்கப் பழக்கவும்.

## முதல் வகுப்பு

1. ஒன்று முதல் பத்து வரை எண்ணிக்கை அறிய துணைக்கருவிகள்—மூன்று.
2. பத்துகளாகக் கட்டிய குச்சிகள், கொட்டைகள் உள்ள பைகள், மணிச்சட்டம்.
3. ஒன்று முதல் நூறு வரை எண்ண ஏணிப்படி—1
4. கூட்டல் கழித்தல் துணைக்கருவிகள்—4
5. சாதாரண மிருகங்கள், பக்ஷிகள், காய்கள், பழங்கள், பூக்கள் காட்டும் சிறிய அட்டைப் படங்கள்—மொத்தம் 20
6. சாதாரணப் பதங்கள் தொகுப்பு—300
7. பதங்களும் சித்திரங்களும், 100 ப்ளாஷ் கார்டுகளும் (ஒளி அட்டைகள்)
8. சிறு வாக்கியங்கள் கொண்ட படங்கள்—5 (ஒவ்வொரு படத்திலும் 10 வாக்கியங்கள்)
9. செய் என்று காட்டும் பதங்கள்—10
10. சிறு கதைகள் 10 (ஒவ்வொரு கதையும், ஒரு படமும் 4 வாக்கியங்களும் கொண்ட அட்டை)
11. தாலாட்டுப் பாட்டுகள், அபிநயப் பாட்டுகள்.
12. களிமண் உருவங்கள்—10
13. அட்டையில் கட்டிய கட்டிடங்கள், கோயில்கள்—4
14. சாதாரணப்பதங்கள் 60 சேர்க்க உபயோகப்படும் எழுத்துக்கள் கொண்ட சிறு அட்டைகள்
15. வர்ணங்கள்—வித்தியாசங் காட்டும் படம்—1

16. 5, 8, 10 பதங்கள் எழுதியுள்ள அட்டைகள்—15 (ஒவ்வொரு அட்டையையும் மூன்று நிமிஷ நேரம் பிள்ளைகள் படிக்கக் காட்டிய பிறகு அட்டைகளை மூடிவிட்டு பிள்ளைகள் சொல்லவும், எழுதவும் பயிற்சி செய்யவும்

17. பயிற்சிக்காக அட்டைகள் 10, (ஒவ்வொரு அட்டையிலும் 10 பதங்கள் தின்னக்கூடியவையும், தின்னக்கூடாதவையும், மிருகங்களும், பொருள்களும், வஸ்துக்களும், வீட்டிலிருப்பவைகளும், வெளியே இருப்பவைகளும், என்றவாறு பலவகையிலும் சேர்த்து எழுதிப் பிள்ளைகளைப் படிக்கச் செய்து, பிறகு பிரித்து எழுதும்படி பயிற்சி செய்வது)

18. உரையாடற்படங்கள் (சம்பாஷணைப் படங்கள்) 4. குடும்பம், கிராமத் தொழிலாளர், பண்டிகைகள் இவற்றை விளக்கவும்.

குறிப்பு :—மேற்கொடுத்துள்ள ஜாப்தாவில் 8, 10, 11, 18 எண் கொண்டவற்றை அட்டைகள் இல்லாவிடில் முழு அளவுத் தாள்களில் அழகாக எழுதித் தைத்து, மேல் உறையிட்டு ஜாக்ரதையாகப் பேணி உபயோகிக்கவும். காலண்டர் (சுவர் பஞ்சாங்கம்) போல சுவற்றில் மாட்டி அவ்வப்போது கையாளவும். இந்த நான்கு வகைகளும் சேர்த்து மொத்தம் 25 தாள்கள் இருக்கும். இத்தாள்களைத் தைத்து வைத்துக் கொள்ளவும்.

6, 7, 9, 14, 16 எண்கள் கொண்டவைகளை அழகான ஒரு நோட்டுப் புத்தகத்தில் (குறிப்புச் சுவடி) எழுதி வைத்துக் கொண்டு அன்றுடம் பயிற்சிக்காக வேண்டியவற்றை அட்டைகளிலும் கரும்பலகைகளிலும் எழுதி உபயோகிக்கவும்.

ஆறு திங்கள் (மாதம்) அல்லது ஒரு வருஷம் சென்ற பிறகு குறிப்புகளை (அதாவது பதங்களையும், வாக்கியங்களையும், கதைகளையும்) மாற்றி மாற்றி பிரிக்கவும்.

படங்களையும் அம்மாதிரியே புதுப்பிக்கவும்.

படங்களில் பிள்ளைகள் செய்ய வேண்டியதையும், அறிந்துகொள்ள வேண்டியதையும் மாத்திரம் சிறப்பாகக் குறிக்கவும்.

செய்யாதே போகாதே என்ற செய்திகளைக் காட்டும் வாக்கியங்களையும் நீதி மொழிகளையும் தவிர்ப்பது (விலக்குவது) நலம்.

எல்லா மொழிகளும் வாக்கியங்களும் பிள்ளைகளின் தினசரி நடைமுறையில் வருவனவாக இருத்தல் வேண்டும்.

அச்சந்தவிர், ஔடதம் குறை, என்பது போன்ற நீதி மொழிகள் இவ்வகுப்பில் தேவையில்லை.

---

## இரண்டாம் வகுப்பு

1. பாடசாலைக் கட்டிடப் படம் (பிளான்)—அட்டை உருவம்
2. 400 பதங்கள் ஜாப்தா
3. ஒவ்வொன்றிலும் பத்து சிறு வாக்கியங்கள் கொண்ட படங்கள்—10 முழுத்தாள்களில் எழுதிவைக்கவும்
4. பதங்களை விளக்கும் படங்கள் 20 (ஒரு முழுத் தாளிலிருக்கலாம்)
5. பொருள்கள்—எதிர்ப்பதங்கள், வர்ணனைப் பதங்கள் முதலியன. ஒவ்வொன்றிலும் 10 பதங்கள் கொண்ட 5 தாள்கள்
6. கதைகளும் படங்களும்—20 கதைகள், ஒவ்வொரு கதைக்கும் நான்கு வாக்கியங்கள்
7. 50 வரை கூட்டல் கழித்தல்கள்—துணைக் கருவிகள்
8. மிருகங்கள், பறவைகள், ஆயுதங்கள்—படங்களும் பதங்களும் கொண்ட 20 தாள்கள்
9. பத்து பத்து பதங்கள் கொண்ட அட்டைகள் 10—(ஒரே இனம், கலப்பு இனம்—பிரித்து எழுதப் பயிற்சி கொடுக்க உபயோகிக்கவும்
10. மூன்று வாக்கியங்கள் கொண்ட நிகழ்ச்சிகள்—கதைகள் 10
11. நோட்டீசு (அறிக்கை) ஸினிமாப் படம் (பேசும் படம்) டிக்கட் (சீட்டு) இவை ஒட்டிய தாள்கள் 2
12. ஸ்தான பேதம் (இட வேறுபாடு) காட்டும் துணைக் கருவி 1
13. 2, 5, 10 வாய்ப்பாடு பயிற்சி அட்டைகள் கார்டு 3.
14. தேதிப் பெட்டி (தேதி காட்ட உபயோகிக்கவும்)
15. அங்குலம், அடி குறித்த அட்டைகள்—குச்சிகள் 4
16. பல நாட்டுக்குழந்தைகள் 10 படங்கள்

    (எஸ்கிமோ, ஸஹாரா, சிவப்பிந்தியர், நீக்ரோ, இங்கிலீஷ், பல்லாரி, கொச்சி, அஸ்ஸாம், ராஜபுதனம், கல்கத்தா இவ்விடப் பிள்ளைகளின் வாழ்க்கை விபர வர்ணனை.
17. உணவுப் பொருள்களின் ஜாப்தா
18. கிராமத்தில் பயிராகும் பொருள்கள்—கிராமத்தில் செய்யப்படும் பொருள்கள், சந்தையில் விற்கப்படும் பொருள்கள்—ஜாப்தா
19. விளையாட்டுகள் 4, வர்ணிக்கும் படங்களும், வாக்கியங்களும்—ஒரு தாள்
20. நற்பழக்க வழக்கங்கள் 4 காட்டும் ஒரு தாள், படங்களும் வாக்கியங்களும்

---

## மூன்றும் வகுப்பு

1. உயிர், மெய், உயிர் மெய் எழுத்துக்கள் ஜாபிதா
2. பதங்கள் சேர்க்கும் விளையாட்டுச் சீட்டுகள் (லெக்ஸிகன் கேம்)
3. 500 பதங்கள் தொடுப்பு
4. பெயர்ச்சொல், வினைச்சொல் (20, 20) கொண்ட தாள் ஒன்று
5. ஒருமை பன்மைகளை விளக்க 20 பதங்கள் ஒரு தாள்
6. மூன்று நிமிஷத்தில் வாசிக்கக்கூடிய சிறு கதைகள் 10
7. பதங்களைச் 'சேர்த்து வாக்கியங்கள் அமைக்கப் பயிற்சி காட்டும் ஒரு தாள்
8. ஒரே கருத்துள்ள வெவ்வேறு பதங்கள் 20 கொண்ட ஜாபிதாத் தாள் ஒன்று
9. வர்ணனை பதங்களும் பொருத்தமான பெயர் வினைச்சொற்களும் 20, 20 கொண்ட ஒரு தாள்
10. ர, ற இவைகளின் பேதங்களை பிரிக்கப் பதங்கள் பத்துகொண்ட ஒரு தாள்
11. ல, ள, ழ இவற்றை விளக்கும் பதங்களும், படங்களும் 10 - பத்து பத்து சொற்கள் குறிக்கவும். ல, ள, ழ-க்களை உச்சரிக்கும் போது நாக்கு, பல் இருக்கும் மாதிரியை விளக்கும் படங்கள்
12. செய்யுள்களும் விடுகதைகளும் 10, 10 - ஒரு தாள்
13. முற்றுப்புள்ளி விளக்கும் வாசகக் கோவை 5
14. கூட்டல், கழித்தல், மனப்பாட சாதனங்கள் - 5 தாள்கள்
15. பெருக்கல், வகுத்தல் (சிறிய எண்கள்) 5 தாள்கள்
16. கால், அரை, முக்கால், அரைக்கால் இவைகளை விளக்கும் படம்
17. மனக்கணக்கு அட்டைகள் 50 (ஒவ்வொரு அட்டையிலும் 5 நிமிஷத்தில் போடவேண்டிய மனக்கணக்குகள்)
18. பாடசாலை கட்டிட அமைப்புப் பிளானும் (அளவும்) 1
19. ஊர் அமைப்புப் படம் ஒன்று.
20. ஊரில் பத்து செடிச் சாலைகளும் சுற்றுப்புறம் கிராமங்களும் 1

    (18, 19, 20—இம்மூன்றும் அந்தந்த ஊர்ப்படமாயிருக்க வேண்டும். ஏதோ புஸ்தகத்திலிருக்கும் படத்தைக் காபி செய்து எழுதி வைத்திருப்பது பிரயோஜனமில்லை
21. பிரயாண சாதனங்கள் ஒரு தாள்
22. பொருட்காட்சி சாலை—இலைகள், வேர்கள், பறவை அலகுகள் குருவிக் கூடு, கற்கள் முதலியவை சேகரித்து வைப்பது
23. சரித்திரக் கதைகளும் படங்களும் ஒரு தாள் (தனிப்படமாக இருந்தால் ஒவ்வொரு படத்திலும் மூன்று வாக்கியங்கள் எழுதி வாசகக் கோவையாகவும் உபயோகிக்கலாம்

24. திசைகாட்டி (மேரினேர்ஸ் காம்பஸ்)
25. தாலூக்காப் படம் (தாலூக்காப் பிரயாணம்)
26. 5 நிமிஷத்தில் எழுத வேண்டிய வாக்கியக் கோவைகள் (ஒவ்வொரு கட்டுரையிலும் முப்பது சொற்களுக்குமேல் இருக்கக்கூடாது. ஒவ்வொரு கோவையும் 5 நிமிஷ நேரத்தில் சொல்லி எழுதவோ பார்த்து எழுதவோ பழக்கம் செய்யவும். பிள்ளைகள் எழுதும் பயிற்சிகள் முதன்மையாகத் துரிதம், பிறகு எழுத்துக்களின் அழகு, பிறகு பிழையின்றி எழுதுவது கவனிக்க வேண்டும்)—10
27. மணல் தட்டு 2
28. வெளி தேசத்திலிருந்து நமக்கு வரும் பொருள்களின் ஜாபிதா
29. இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்குச் செல்லும் பொருள்களின் ஜாபிதா (பொருள்கள் பிள்ளைகள் நடைமுறையில் கண்டறிபவையாக இருத்தல் வேண்டும்)
30. 6, 12, 23, 26 இவைகளை மௌன படிப்புப் பயிற்சிக்கும் உபயோகிக்கவும்

---

## நான்காம் வகுப்பு

1. 700 பதங்கள் ஜாப்தா
2. மாதிரிக் கடிதங்கள்
3. பண்டிகை திருவிழா—5 கொண்ட படங்களும் வாக்கியக் கோவையும் கொண்ட 1 தாள்
4. செய்யுள்களும் விடுகதைகளும்
5. மாற்றுச் சொற்கள், எதிர்ப்பதங்கள் 20 கொண்ட 1 தாள்
6. ஒருமை பன்மை 20 கொண்ட 1 தாள்
7. மூன்று காலங்களை விளக்கும் பதங்கள்—20 கொண்ட 1 தாள்
8. வர்ணனைப் பதங்களும் பொருத்தமான பதங்களும்—20 கொண்ட 1 தாள்
9. சிறிய உபகரணங்கள்—20 கொண்ட 1 தாள்
10. ல, ள, ழ விளக்க 10 வாக்கியங்கள்—சொல்லச் சொல்லிப் பழக்குக
ர, ற, ன, ந விளக்கும் 10 வாக்கியங்கள்
ஷ, ஜ, ஸ—விளக்கும் 10 வாக்கியங்கள்
(பார்த்துப்பார்த்து எழுதப் பழக்குக)
11. 10 நிமிஷத்தில் மௌனமாய் வாசிக்கக்கூடிய சிறு கதைகள் (பத்திரிகைக் கதைகளைத் திருத்தி அமைத்து எழுதிவைக்கலாம்) 10, ஒவ்வொரு கதையிலும் 150 பதங்களுக்குக் குறையாமல் 200 பதங்களுக்கு அதிகப் படாமல் இருப்பது நலம்

12. 5 நிமிஷத்தில் எழுதவேண்டிய வாசகக் கோவைகள் 50. ஒவ்வொன்றிலும் 40 முதல் 50 பதங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். ஒவ்வொன்றையும் 5 நிமிஷ நேரத்தில் பார்த்து எழுதவோ சொல்லி எழுதவோ பழக்கம் செய்யவும். துரிதம், அழகு, முக்கியமாக கவனிக்கவும். பிழையற எழுதவும் பயிற்சி செய்யவும்
13. பாடங்களில் சுருக்கம், கதைகளில் சுருக்கம் இவைகள் எழுதுவதில் பழக்கம் 40 முதல் 50 வரை பதங்களுக்கு உட்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் பிள்ளைகள் தாமே பார்த்து எழுதப் பழக்கம், மாதிரிச் சுருக்கம் 4 எழுதிவைக்கவும்.
14. பழமொழிகள் 10 கொண்ட 1 தாள்
15. பிராஸப் பதங்கள் (எதுகைப் பதங்கள்) ஒலிக் குறிப்புப் பதங்கள் கொண்ட ஒரு தாள்
16. விஷயத்தைப் பொறுக்கி எழுதப் பயிற்சி மாதிரி 4 கொண்ட 1 தாள்
17. கடிகாரம் அட்டையில் தயார் செய்யவும்—1
18. லிங்கு, சங்கிலி அளவு மாதிரி—1
19. பின்னங்கள் போதிக்க உபகரணங்கள்
20. சமசதுரம், நீண்ட சதுரம்—அட்டைகள் 8.
21. விதை முளைத்துச் செடியாகுதல் படம் 1
22. சீதோஷ்ண கால நிலை—அட்டை (சார்ட்) 1
23. இயற்கைக் காலண்டர்—பூ, பழம் கிடைக்கும் காலங்களும் பருவங்களும்—1 தாள்
24. விதை பரவும் விதம் பூசாரம் விளக்க—1 தாள்
25. உஷ்ணமானிப் படம் (டாக்டர் உபயோகிக்கும் உஷ்ணமானிப் படம்)
26. இந்தியாப் படங்கள் 6. 1. மலைகள், நதிகள், காற்றுகள். 2. மழை விளைபொருள்கள், கால் நடைகள். 3. மக்கள்தொகை, பட்டணங்கள். 4. பட்டணங்கள், போக்கு வரவு சாதனங்கள், துறைமுகங்கள். 5. தொழில்கள், வியாபாரம். 6. அரசுகள் (இவ்வாறையும் ஒருங்கே தைத்து சுவர் காலண்டர் மாதிரி உபயோகிக்கலாம்)
27. ஜில்லா சுற்றுப் பிரயாண விளையாட்டுப் படம்
28 இந்தியாவில் சுற்றுப் பிரயாண விளையாட்டுப் படம்
29. பட்டணங்களை வர்ணிக்கும் படங்கள் 4 அல்லது 5 ஒட்டிய தாள் 1
30. சரித்திரப் படங்கள் 7. அசோக ராஜ்ஜியப் படம் கற்றாண் படமுள் பட. பல்லவ ராஜ்ஜிய படம்—மஹாபலிபுரம்—1 தாள்.

சோழ ராஜ்ஜிய படம் தஞ்சாவூர் கோயில்—1. கிருஷ்ண தேவ ராயர், ஹம்பி—1. டில்லி பாதுஷா, தாஜ்மஹால்—1. கிளைவ் திருச்சிக்கோட்டை 1. திப்பு, ஸ்ரீரங்கப்பட்டணம்—1. இந்த ஏழையும் ஒருங்கே தைத்து வைத்துக் கொள்ளலாம்

31. ஜில்லா உத்தியோகஸ்தர்கள்—1 தாள்.
32. சுகாதார விதிகள் 1 தாள் (சுகவாழ்விற்கு வேண்டுவன)
33. தெருவில் ஜாக்கிரதை. இப்படத்தில் பட்டண வாழ்க்கை அம்சப் படங்களை மாத்திரம் புஸ்தகங்களில் இருப்பவைகளைக் காபி செய்யாமல் அவரவர் ஊரில் பிள்ளைகளுக்குத் தினசரி நடை முறையில் பிரயோஜனப்படக்கூடிய அம்சங்களாக எழுதவும்.

---

## ஐந்தாம் வகுப்பு

1. 800 பதங்கள் ஜாபிதா
2. கடிதங்கள் மாதிரி, வியாபாரம், அழைப்பு, மறுப்பு முதலியன 1 தாள்.
3. வாக்கிய அமைப்பு விளக்க 1 தாள். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் காட்டும் வாக்கியங்கள் 10.
4. மூன்று நிமிஷத்தில் வாசிக்கக்கூடிய பயிற்சிக்கான 10 வாசகக் கோவைகள். ஒவ்வொன்றிலும் 60 முதல் 80 வரை பதங்கள் இருக்கலாம். ஒவ்வொன்றும் முற்றுப் பெற்ற (பூர்த்தியான) கட்டுரையாக அல்லது கதையாக இருக்கலாம்.
5. வேற்றுமைப் பயிற்சி 1 தாள்.
6. பல சொல் ஒரு பொருள், ஒரு சொல் பல பொருள்—உதாரணங்கள் 10 - 1 தாள்
7. உபமானங்கள் 10
8. பழமொழிகள் 10
9. ல, ள, ழ, பழக்க வாக்கியங்கள் 10
10. ர, ற, ண, ந, பழக்க வாக்கியங்கள் 10
11. ஷ, ஜ, ஸ, க்ஷ, பழக்க வாக்கியங்கள் 10
12. வர்ணனைப் பதங்களும் பொருத்தமான சொற்களும் 20 கொண்ட ஒரு தாள்
13. செய்யுள்கள் 26, விடுகதைகள் 10 ஒரு தாள்
14. பிராஸப் பதங்கள் 50 கொண்ட ஒரு தாள்
15. விஷயச் சுருக்கம் 5, பெருக்கம் 5—பயிற்சி மாதிரிகள்
16. ஐந்து நிமிஷத்தில் எழுதவேண்டிய உரைநடைக் கோவைகள் 50 ஒவ்வொன்றிலும் 50 முதல் 80 வரை பதங்கள் இருக்கவேண்டும். விஷயம் முற்றுப் பெற்றதாக இருக்கவும்

17. அரை மணி நேரத்தில் படிக்கவேண்டிய பாடங்கள்—கதைகள்—ஜாபிதா—10 பாடங்கள் அல்லது கதைகள். ஒவ்வொன்றிலும் 500 முதல் 800 வரை பதங்கள் இருப்பனவாகக் கணக்கிட்டுப் பொறுக்கிக் குறித்து வைக்கவும்
18. இரண்டு மணி நேரத்தில் படிக்கவேண்டிய கதைப்புத்தகங்கள் ஜாபிதா—ஒவ்வொன்றிலும் 2500 முதல் 4000 வரை பதங்கள் உள்ளவைகளாகக் கவனித்துப் பொறுக்கிக் குறித்துவைக்கவும். 4 அல்லது 6 புஸ்தகங்களாவது தேர்ந்தெடுக்கவும்
19. பின்னங்கள் போதிக்க உபகரணங்கள் 1 தாள்
20. பின்ன வாய்ப்பாடுகள் 1 தாள்
21. மழைமானி, உஷ்ணமானி, வாயுமானி படங்கள் தாள் 1
22. வேர்களின் வேலை படம் 1
23. இயற்கையில் ஸானிடரி வேலை நடைபெறுவதை விளக்கும் படம் 1
24. இலைவகைகள் படம் 1
25. பூக்களும், பாகங்களும்—படம் 1
26. எண்ணெய் வித்துகள்—படம் 1
27. தவளையின் வரலாறு—படம் 1
28. பாம்புகள் வகைகள்—படம் 1
29. பொருட்காட்சி சாலை—பொருட்கள் ஜாபிதா
30. உலகப்படம்—1. கண்டங்கள், கப்பல், ரயில், விமானவழிகள், முக்கியபட்டணங்கள், 2. இயற்கைப் பிரிவுகள், தொழில்கள், எண்ணெய், நிலக்கரி, ஆலைத்தொழில்கள், 3. உலகச் சுற்றுப் பிரயாணம்—விளையாட்டு.
31. இந்தியாப் படம்—1. பல்லவ ராஜியம், 2. குப்த ராஜியம், 3. அக்பர் ராஜியம், 4. மஹாராஷ்டிர ராஜியம், 5. ஆங்கில அரசாட்சி விஸ்தரித்ததைக் காட்டும் படம் 6. தற்கால இந்தியா, (ரயில், கப்பல், விமான வழிகள்)
32. அரசியல் பிரிவுகள் விளக்கும் படம்—ஒரு மரம் அல்லது வேறு விதப் படம்
33. வரிகள்—சார்ட்
34. கிராம சுகாதாரம்—கிணறு, தெரு, சுத்தம்—சுத்த உணவு—படம் 1 தாள்
35. கொசுவினால் தீமை, ஈ செய்யும் அட்டூழியம்—படம்
36. மனத்தின் விரோதிகள்.

---

# அனுபவக் கனிகள்

**P. N. Kalyanasundaram,** *Headmaster, Bd. Ele. School, Madurantakam*

## ஆரம்பப் பாடசாலையில் மௌன வாசிப்பு

தமிழ்ப் பாடம் என்னும் தலைப்பின்கீழ் பாட அட்டவணையில் தற்போது மௌன வாசிப்பு முக்கியஸ்தானம் வகிக்க ஆரம்பித்திருக்கிறது. பூரணமான தமிழ்ப் பாடம், வாசித்தல், எழுதுதல், சம்பாஷித்தல் (வாய் மொழி வியாசம்), வியாசம் எழுதுதல் யாவும் அடங்கியது.

வாசித்தல் என்னும் பாகம் ஆசிரியர்களால் நன்கு கவனிக்கப் படல் வேண்டும். ஏனெனில், இதர அம்சங்களுக்கு வாசித்தல் தான் முதற் படியாகவும் கல்விக்கே அடிப்படையாகவும் விளங்குகிறது. இது வரையில் குழந்தைகளை வகுப்பில் உரத்து வாசிக்கச்செய்தல் ஒன்றையே அநேகமாக நாம் கையாண்டு வந்தோம்.

சில பிள்ளைகள் அதற்கென்று ஒருவித ராகம் போட்டுப் படித்து வருவதைக் காண்கிறோம். தற்போது ஏற்பட்டுள்ள புதிய பாட திட்டம் 'மௌன வாசிப்பை' வற்புறுத்துகிறததனால் உரத்து வாசித்தல் இனி அவசியமில்லையென்று கருதிவிடவும் கூடாது. ஏனெனில் கல்வி கற்றலுக்கு உரத்து வாசித்தல் சிறுவர்களுக்கும், மௌன வாசிப்பு முதியோர்களுக்குமாக நடைமுறையில் இதுகாறும் கையாளப்பட்டு வருகின்றன.

ஆகவே, பின்னால் (அதாவது மனிதனான பிறகு) மௌனமாக வாசிப்பதற்கும் ஆரம்பப் பள்ளியிலேயே அஸ்திவாரம் போடவேண்டும் என்பதுதான் நமது கல்வித் திட்டம் வகுத்த அதிகாரிகளின் கருத்தாகும்.

ஆகவே உரத்து வாசிப்பதும் அவசியம். மௌனப் பயிற்சியும் இன்றியமையாததே. இவற்றின் நன்மைகளை ஆராய்வோம்.

உரத்து வாசித்தல்.—குழந்தைகள் புதிய வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளும் போது உரத்து வாசித்தால் தான் சரியான உச்சரிப்பு ஏற்படும். மௌனமாகப் படித்துக்கொண்டு போகும் பையன் உரத்து வாசிக்கும்போது சில வார்த்தைகளைத் தெளிவாக உச்சரிக்கிறானா என்று அறியவேண்டியது அவசியமல்லவா? அதோடு உரத்து வாக்கியங்களைப் படித்தலும், பிழையறப் பாட்டுகளை உரத்து ஒப்புவித்தலும், அழகாகப் பேசும் திறமை, சம்பாஷிக்கும் திறமைகளை உண்டாக்குகின்றன. ஆதலால், உரத்து வாசித்தல் வகுப்பில் வெகு முக்கியமானதேயாகும். ஆனால் இதர வகுப்புகளுக்குத் தொந்தரை ஏற்படும்படி ஏக

காலத்தில் எல்லாக் குழந்தைகளும் கட்டிடம் அதிரும்படி படித்தல் நன்மைக்குப் பதில் தீமை பயக்கும். ஒருவிதமாக ராகம் போட்டுச் சுவையின்றிப் படித்தலையும் ஆசிரியர் அகற்ற முயலவேண்டும்.

கேட்பவர்களுக்குப் பொருள் விளங்கும் வண்ணம் உரத்து வாசிக்கப் பயிற்சி அளித்தல் ஆசிரியர் கடன்.

மௌன வாசிப்பு.—ஒரு வாரத்தில் சில மணி நேரங்கள் கால அட்டவணையில் மௌன வாசிப்புக்கென்று குறித்துக் கொள்ளவேண்டும். ஏன், நினைத்த போதெல்லாம் மௌனமாகப் படிக்கச் செய்தால் என்ன? என்று கேட்கலாம். அது அனுபவத்தில் சாத்யமாகாததுடன்—குழந்தைகள் மௌனமாக வாசிப்பதில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளார்கள் என்று ஆசிரியர்களால் நிர்ணயிக்கவும் முடியாது.

ஆகவே, 'மௌன வாசிப்பு' நேரத்தில் குழந்தைகளை உதடு அசையாமல், முணு முணு சப்தம் வராமல், கண்ணால் படித்துவரப் பயிற்சி அளிக்கவும்.

முதலில் குழந்தைகளிடம் இந்த நிபந்தனைகளைக் கூறுவதுடன் "உங்கள் தகப்பனார் பேபர் படிக்கிறதுபோலப் படி" "இப்போது நான் படிக்கிறது போலப் படி" என்று சொல்லிவிட்டு; ஆசிரியர் ஒரு புத்தகத்தில் உள்ள ஒரு பக்கத்தை குழந்தைகளுக்குக் காட்டி—எதிராக உள்ள கடிகாரத்தில் மணி இப்போது 10-15 என்று சொல்லிவிட்டு மௌனமாகப் படிக்கவேண்டும். குழந்தைகள் ஆசையோடு ஆசிரியர் மௌனமாகப் படிப்பதைப் பார்த்துக்கொண்டு வருவார்கள். படித்து முடிந்ததும் மணி என்ன என்று கேட்டு எத்தனை நிமிஷங்கள் வரை நான் மௌனமாகப் படித்தேன்? என்று கேட்கலாம். பிறகு குழந்தைகளைப் பார்த்து நீங்கள் 'திருவள்ளுவர் பாடத்தை' மௌனமாகப் படியுங்கள்! என்று சொல்லிவிடவும். சிறுவர்கள் படிக்கும்போது தம்மையும் அறியாமல் முணு முணு சப்தம் ஏற்படும், அப்போது ஆசிரியர், அன்பாக 'இது மௌனவாசிப்பு அல்ல' என்று சொன்னால் மறுபடியும் இரண்டொரு நிமிஷங்கள் சரியானபடி மௌனமாகப் படிப்பார்கள். குழந்தைகள் மௌனமாகப் படிக்கும்போது ஆசிரியர் வேறு வேலை செய்யக் கூடாது. அவர்களைக் கூர்ந்து கவனித்து வரல் வேண்டும். இல்லாவிட்டால் சில குறும்புக்காரக் குப்பன்கள் படிப்பதுபோல் பாவனை செய்வார்கள்; சிலர் புஸ்தகத்தை மூடிவைத்து விட்டுப் படித்து விட்டேன்! சார்! என்பார்கள். கேள்வி கேட்டால் பழைய ஞானத்திலிருந்து ஏதாவது பதிலும் சரியாகக் கூறித் தப்பித்துக் கொள்வார்கள். ஆகவேதான் மௌனவாசிப்புக்கு உபபாட புத்தகங்களும் சார்ட்டுகளும் அவசியமாகின்றன. புதிய கதைகள்—ரசமான விவரங்கள்—பத்திரிகைகளினின்றும் கத்தரித்து அட்டைகளில் ஒட்டிய செய்திகள் கரும்பலகையில் பொது அறிவு வாக்கியங்கள்—இவைகளை 5வது, 4வது வகுப்புக்

குழந்தைகளை மௌனமாகப் படிக்கச் செய்யலாம். மௌனவாசிப்பு நேரத்தில் கடைசியில் சில நிமிஷங்கள் குழந்தைகள் படித்தார்களா என்று அறியச் சில கேள்விகள் கேட்பதும் அல்லது கவனத்திலிருந்து எழுதச் செய்வதும் பலன் அளிக்கிறது. மௌன வாசிப்புக்குப் புத்தகங்களுக்கு எங்கே போவது என்று சில ஆசிரியர்கள் திகைப்புறலாம். ஒரே புத்தகத்தைப் பல காப்பிகள் வாங்கி அவர்களிடம் கொடுத்துப் படிக்கச் செய்தல் அவ்வளவு பயன் ஏற்படவில்லை. ஏனெனில் அதில் அவர்களுக்குப் புதுமை தோன்றவில்லை. வீட்டில் ஓய்ந்த நேரத்தில் படித்துவிட்ட விஷயத்தை மறுபடியும் படிக்கச் செய்வதால் சுவை தோன்றாது.

ஆகவே மௌனவாசிப்பு நேரத்தில் அவர்களிடம் கொடுக்கும்—சிறு கதைப் புத்தகங்கள், சார்ட்டுகள் இவைகளை உடனே ஆசிரியர் வாங்கிக்கொள்ள வேண்டும். அடுத்த மௌனவாசிப்பு வகுப்பில் தான் மறுபடி அவைகளைக் கொடுக்க வேண்டும். அப்போது சில சிறுவர்கள் முன்னால் படித்து முடியாமல் விட்ட கதையைத் தொடர்ந்து படிக்க ஆர்வமுறுவதுடன் படித்த விஷயத்தைக் கியாபகம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் அதனால் பயிற்சியும் ஏற்படும்.

கல்வி அதிகாரிகள் வருங்கால் மௌனவாசிப்பு விஷயமாய் நீர் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன ? என்ற கேள்விக்கும் சந்தோஷமாக நாம் அவர்களிடம் நாம் செய்த காரியத்தைச் சொல்லலாம். குழந்தைகள் சரியானபடி மௌனமாகவும் வாசித்துக் காட்டுவார்கள்.

மௌன வாசிப்புப் பயிற்சிதான் அவசியமே தவிர்த்து அன்பும் அறிவும் உள்ள ஆசிரியர் அதற்கென்று சிரத்தையோடு கையாளும் முறைகளில் ஒருவரும் குறை கூற முன்வரார் என்பது என் துணிபு. 1. கரும் பலகையில் வாக்கியங்கள் எழுதி 5 அல்லது 10 நிமிஷ நேரம் உற்று மௌனமாகப் படிக்கச் செய்து குழந்தைகளை வேறு இடத்திற்கு அழைத்துப்போய் எழுதச் செய்தல் வகுப்பில் ஏற்ற முறையாக என் அனுபவத்தில் பயன் அளிக்கிறது.

(உ-ம்) 1. விமான விபத்துக்குப் பயந்து சென்னையிலிருந்து ஆயிரக் கணக்கான மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வேற்றூர்களுக்குப் போகிறார்கள். 2. செய்யும் |தொழிலனைத்திலும் நெய்யும் தொழில் சிறந்தது. 3. சுகவாழ்வு விரும்பும் ஒருவன் சுகவிதிகளை அலட்சியம் செய்யலாகுமா? 4. இன்று முதல் நமது பாடசாலை காலை 8-30 மணிக்கே ஆரம்பிக்கப்படுகிறது. 5. உற்சவத்திற்கு வெளியூர்களிலிருந்து ஜனங்கள் ஏராளமாக வந்திருக்கிறார்கள்........etc. போன்ற 10 வாக்கியங்கள். அல்லது பாட புத்தகத்தில் ஒரு பாடத்திற்கு ஒரு முக்கியமான வாக்கியம் வீதம் கடந்த பாடங்களிலிருந்து 10 வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதிப் படிக்கச் செய்தல்.

மேற்கண்ட முறையை 3வது வகுப்பிற்கும் பயன்படுத்தலாம். ஆனால் முறை வேறு. கொட்டை எழுத்துக்களில் அவர்கள் அறிந்ததும், சற்றுப் புதியதுமான பதங்களை எழுதி மௌனமாகப் படிக்கச் செய்து—பின்னர் எத்தனை வார்த்தைகள் கவனத்திலிருந்து எழுதுகிறார்களோ அத்தனை மார்க்குகள் கொடுத்து உற்சாக மூட்டலாம். வருஷாரம்பத்தில் இப்படி ஆரம்பித்து—வருஷப்பிற்பகுதியில் சிறுவாக்கியங்களையும்—அவர்களுக்குத் தெரிந்த சிறுகதைகளை 10 வாக்கியங்களில் மௌனமாகப் படிக்கும்படியும் செய்யலாம். கொட்டை எழுத்துக்களில் சிறு வாக்கியங்களாலான சிறுகதைகளை (புதியவைகளாக இருத்தல் வேண்டும்) எழுதி ஒரு குழந்தைக்கு ஒரு அட்டை அல்லது இருவருக்கு ஒரு அட்டை கொடுத்து மௌனமாகப் படிக்கச் செய்து வியாசப் பாடத்தில் எழுதச் செய்யலாம். சிறு வகுப்பு ஆனதால் அதே அட்டையை இரண்டு மூன்று தடவைகள் அதே சிறுவனுக்கு மௌனமாகப்படிக்கக் கொடுக்கலாம். ஊக்கமுள்ள ஆசிரியர்—தினசரிப்பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகளிலிருந்து மிகப் பெரிய கொட்டையான தலைப்புகளைக் கத்தரித்து ஒரு அட்டையில் 4 அல்லது 5 தலைப்புகளை ஒட்டி வகுப்பில் மொத்தமாகச் சிறுவர்களை மௌனமாகப் படிக்கச் செய்யலாம். எளிய வாக்கியங்களும் வார்த்தைகளும் 2 வது வகுப்புக்கும் மௌனவாசிப்புக்கு ஏற்றது. இரண்டாவது வகுப்பிற்கு மௌன வாசிப்பா? என்று அதிசயிக்க வேண்டியதில்லை. உதாரணமாக—மிருகங்களின் பெயர்கள், பண்டிகைகளின் பெயர்கள்—பத்திரிகைகளில் உள்ள சிறுதலைப்புகளை எழுத்துக் கூட்டிக் குழந்தைகள் படிக்க ஆவல் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். இதை உற்சாக மூட்டுவது நல்லதல்லவா?

| | | |
|---|---|---|
| (உ-ம்) | ஆனந்த விகடன் | நாரதர் |
| | குமார விகடன் | சுதேசமித்திரன் |
| | புன்னகை விகடன் | தினமணி |

இதுபோன்ற பத்திரிகைப் பெயர்களைக் கத்தரித்து ஒட்டினால் படிப்பதில் என்ன கஷ்டம்? இஃது 2 வது வகுப்பிற்குப் பொருத்தமானது அல்லவா. அச்சுப்போன்ற பெரிய எழுத்துக்களாலான சார்ட்டுகளைத் தயாரிக்க எல்லாருக்கும் மேற்கண்ட முறை சாத்தியமாகும்.

ஆதலின் 2வது வகுப்பில் மௌன வாசிப்பு ஆரம்பிக்கப்பட்டு அளவிலும், விஷயத்திலும் வரவர அதிகரிக்கப்பட்டு 5 வது வகுப்பு முடியும் சமயத்தில் எடுத்த ஒரு புஸ்தகத்தை ஒரு சிறுவன் அல்லது சிறுமி மௌனமாகவே படித்து முடித்துப் பொருள் அறியும் சக்தியை ஊட்டுவதே "மௌன" வாசிப்பின் நோக்கம் ஆகும். உரத்து நீண்ட நேரம் படிப்பதால் ஏற்படும் சோர்வைக் குறைக்கவும் மௌனவாசிப்பு உதவி

யளிக்கிறது. மௌனமாகப் படிப்பதால் மனதில் விஷயங்கள் என்றும் மறவாமல் பதியும் சக்தியும் அதிகரிக்கிறது.

ஒரு பாடசாலையில் 'மௌனவாசிப்பு' செவ்வனே நடைபெற வேண்டுமாயின் குறைந்தது 50 சிறிய கதைப் புத்தகங்கள். அடங்கிய 'லைப்ரெரி' இருத்தல் வேண்டும். குறைந்த விலையில் அழகிய சிறு கதைப் புத்தகங்கள் வகுப்புகளுக்கேற்ப எல்லாக் கம்பெனிகளிலும் அகப்படும். ஒரு டஜன் புத்தகங்களாவது ஆரம்பத்தில் அவசியம். கொட்டை எழுத்துக்களில் சார்ட்டுகளும் மேற் கூறியபடி நிறையத்தயாரில் இருத்தல் வேண்டும். சில சமயங்களில் கரும்பலகைப் பயிற்சிகளும் கொடுக்கலாம். எப்போதும் கரும்பலகை வாக்கியங்களை மௌனவாசிப்பிற்குப் பயன்படுத்தவும் கூடாது. ஏனெனில் உற்சாகம் இல்லாது போய்விடும். பழைய பாடங்கள்—மிகச் சுலபமான பதங்கள்—ஏற்கனவே தெரிந்த கதைகள்—இவைகள் யாவும் மௌனவாசிப்புக்கு ஏற்றதல்ல.

எனது அனுபவத்தில் பூரணமான பள்ளிக்கூடம் அதாவது 5 வகுப்புகள் உள்ள பாடசாலைத் தலைமை யாசிரியராக இரண்டாண்டுகள் கையாண்ட முறைகளை நண்பர்களுக்குக்கூறி இன்னும் சிறந்த முறைகளையும் ஆசிரியர்கள் மூலம் பாலர்கல்வி வாயிலாக அறிய முயல்கிறேன். அடுத்த இதழில் 'மியூஸியமும் அதன் அவசியம்' வெளிவரும்..


## திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் சிலவு பிரத்தியேகம்)

: வேண்டுபவர்கள் :

ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்

ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

# கலையும் கைத்தொழிலும்—XI

(By R. M. Savur, *Divisional Inspector of Schools, Coimbatore.*)

ஸெல்லோபோன் நாடாவை வார் தையலில் உபயோகித்த நமது வாசகர்கள், கருவியால் செய்யப்பட்ட துவாரத்தில் நாடாவை எப்படி நுழைப்பது என்பதை தெரிந்துகொண்டிருப்பார்கள். தெரிந்துகொள்ளாவிட்டால் சுலபமாய்ச் செய்யும் விதத்தை நான் சொல்லுகிறேன். நீளமான காதுள்ள பெரிய ஊசியை உபயோகிக்க வேண்டும். ஊசியின் காதுள்ள பக்கத்தை துவாரத்தில் வெளியில் கொஞ்சம் நீட்டியிருக்கும்படி நுழை. ஸெல்லோபோன் நாடாவின் நுனியை துவாரத்தில் நுழை. ஊசியை கொஞ்சம் சாய்வாக திருப்பி இழு. (சட்டைப்பொத்தான்களின் துவாரத்தின் வழியாக எடுப்பதுபோல் இழுக்கவும்).

சரிகையும் வாரும் கலந்து பின்னும் விதம்.

பின்னல் என்பதைப்பற்றி வாசகர்களுக்கு விவரிக்க வேண்டிய அவசியமில்லை. பெல்ட்டுகள், பைகளுக்கும் ஸூட் கேஸ்களுக்கும் பிடி செய்யவும், இன்னும் இஷ்டமான பல வேலைகளுக்கும் தோல்பின்னலை உபயோகிக்கலாம். கீழே காட்டிய படத்தில், இரண்டு தலைப்புகளும் வெட்டுப்படாதபடி மூன்று பட்டைகள் கொண்ட ஒரு சாதாரண பின்னல் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு நுனியில் பக்கிள் (**buckle**) மட்டும் தைக்கப்பட வேண்டியிருப்பதால் இந்தப் பின்னல் பெல்டுக்கு உபயோகப்படக்கூடியது.




A. மேல்பாகத்தைப் பின்ன ஆரம்பிக்கு முன் அடிப்பாகம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

இந்தப் படம் மூன்று பட்டைகள் உபயோகப் படுத்தியிருப்பதைக் காண்பிக்கிறது. இதை முதலில் பழக்கிக்கொள். ஒற்றைப்

படையாகவுள்ள எத்தனை பட்டைகள் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.

படத்தைக் கூர்ந்து கவனி. பின்னலின் விதம் சுலபமானதாகக் காணப்படும்.

எடுத்துக்கொள்ளப்படும் தோலின் நீளம் முடிவடைந்த பொருளின் நீளத்தைவிட ஜாஸ்தியாக இருக்கவேண்டும் எவ்வளவு நீளம் இருக்கவேண்டும் என்பதை ஒரு சிறிய மாதிரியினால் தெரிந்துகொள்ளலாம். தோலை மூன்று சம அகலமுள்ள பட்டைகளாக வெட்டு. ஒரு நுனியில் பக்கிளை அமைக்கவும் மற்றொரு நுனியில் பக்கிள் துவாரம் செய்யவும் போதுமான அளவு தோலை வெட்டாமல் விட்டுவிடு.

வழக்கம்போல் பின்ன ஆரம்பி. ஒரு நுனியிலுள்ள வெட்டுப்படாத பாகத்தை ஒரு மேஜையின் ஓரத்தில் இரண்டு ஆணிகளைக் கொண்டு பொருத்தி வைத்தால் மிகவும் சுலபமாக இருக்கும். வலது பக்கத்துப் பட்டை திரும்பவும் வலதுபக்கம் வந்ததும் (படத்தில் கருப்பு வர்ணமிட்டது) மேல்பாகத்தை ஒரு கிளிப்பினால் (clip) ×....× என்று காட்டப்பட்ட இடத்தில் பிடிக்கவை. அப்பொழுது அது பிரியாது. உன் இருகைகளும் விலகி இருக்கும்.

இப்பொழுது (பின்னப்படாத) கீழ்பாகத்தை எடுத்துக்கொள். பட்டைகள் நேராக இருக்கட்டும். வலது பக்கத்துப்பட்டை மறுபடி வலதுபக்கம் வரும்பொழுது ஒவ்வொரு தடவையும் பின்னலைப் பிரித்துவிடு.

**எச்சரிக்கை.** பின்னலை மிகவும் நெருக்கமாகப் பின்னு. ஏனென்றால் முடிவில் பின்ன முடியாதபடி இடம் ஏற்படும். அப்பொழுது முடிவடைந்ததும் மிகவும் தளர்த்தியாக இராது.

# 33RD PROVINCIAL EDUCATIONAL CONFERENCE, VELLORE.

*11, 12 and 13 May 1942.*

## DRAFT RESOLUTIONS TO BE CONSIDERED AT THE 33rd PROVINCIAL EDUCATIONAL CONFERENCE.

**Resolution for reiteration** to be held at Vellore on the 11, 12 and 13th May.

This Conference requests the Government to create a provincial Advisory Board of Education consisting of representatives of the Government, the Universities, the managements and the South India Teachers' Union to advise on matters educational and professional.

(No. 4. 32nd Conference—Rishi Valley.

**Provident Fund:**

This Conference requests the Provincial Government to increase the rate of contribution by the Government from 1/3 to 1/2 of the amount to the credit of the subscriber at the time of closure of his account.

(No. 5a. 32nd Conference—Rishi Valley.

3. **Grant-in-aid.** This Conference presses upon the Government the necessity for the revision of the Grant-in-aid code so as to improve the equipment and conditions of service in schools and also to ensure security of tenure of teachers. (No. 6, 32nd Provincial Conference-Rishi Valley)—Board High School, Kodavasal.

Resolved that resolution No. 9, regarding the necessity for a revised scale of pay, namely, 45-5/2-75, for Oriental title holders, passed at the Conference held last year, be reiterated.

This Conference views with great concern the prospects of Education in the period of war and post-war and requests the Government to **plan** forthwith a **continued functioning of schools and education of children** in areas affected or likely to be affected by enemy action.

This Conference requests the Government to make adequate **budgetary provision by way of compensation to managements** of institutions suffering financial loss incurred by them consequent on the dislocation of normal activities by war.

This Conference appeals to **Teachers** in the Province to equip themselves in **arts and crafts** with a view to line up with the need of New Education and requests the Government to provide necessary facilities for training in such courses.

This Conference appeals to all managements **to orgaaise scouts and Rovers and First Aid and School A. R. P. squads in each institution** from among teachers and students for school and social service—The E. R. High School and The Trichinopoly District Guild.

This Conference is of opinion that the choice of text books should be vested in the heads of institutions.

This conference requests the University authorities to so amend the regulations as to permit bona fide teachers to appear privately for the B. O. L. Degree examination as they permit bona fide teachers to appear for the examinations in arts, without insisting upon the attendance certificate.

In view of the non-availability of trained candidates in accordance with the qualifications stated in the M. E. R. this Conference requests the Government that the Physical Training instructors who have put in more than ten years' service and have undergone the refresher courses held periodically may be considered as possessing the necessary qualifications to hold the post as per M. E. R.

This Conference resolves to request that, in view of the increasing price of foodstuffs consequent on war conditions, the managements be pleased to grant liberal war allowances to the teachers of all grades.

This Conference requests the Government to allow teachers serving in Elementary schools under the Labour Department the benefit of bonus on the Provident Fund contributed, as is done in the case of teachers under District Boards.

This Conference requests the Government to introduce a system of Provident Fund with bonus to teachers in Panchayat schools similar to the one for the District Board Teachers.—The Salem District Teachers' Guild.

NOTICE.—The above resolutions will be placed before the Subjects Committee of the 33rd Provincial Educational Conference on the 11th May 1942. Members desirous of moving amendments should give notice of the same on or before the 1st May to the Secretary, Reception Committee of the Provincial Educational Conference, Vellore.

T. P. SRINIVASAVARADHAN,
*Hon. Secretary.*

---

## NOTICE

The annual General Body meeting of the South India Teachers' Union will be held on Wednesday the 13th May at 10 a.m. in the Conference Hall of the 33rd Provincial Educational Conference, Vellore. The following will be the agenda :

1. Minutes of the last meeting.
2. Consideration of the annual report.
3. Election of Office Bearers.
4. Amendments to the rules of the union given notice of by Sri S. Srinivasan of Chengam—(vide page 156 of the S.I.T.)
5. Any other business.

T. P. SRINIVASAVARADAN,
*Secretary.*

S. T. RAMANUJAM,
*Joint Secretary.*

# 33RD MADRAS PROVINCIAL EDUCATIONAL CONFERENCE, 1942, VELLORE.

## LIST OF DELEGATES

### NORTH ARCOT

**Board High School, Kaveripauk**

1. Sri M. S. Subrahmanya Sastri.
2. ,, T. Panchapakesa Iyer.
3. ,, S. Venkatasubrahmanya Sastri.
4. ,, P. A. Thiruvengada Mudaliar.
5. ,, N. Ramachandra Rao.
6. ,, C. Srinivasa Iyengar.
7. ,, J. W. Manickam.
8. ,, S. K. Lakshmana Mudaliar.
9. ,, A. C. Shanmuga Mudaliar.
10. ,, A. Gurunatha Mudaliar.
11. ,, M. Muniswamy Pillai.

**Concordia High and Training School, Ambur**

12. Sri S. Immanual.
13. ,, B. R. Ebenezer.
14. ,, G. J. Balasundaram.
15. ,, A. M. Sivagnanam.
16. ,, S. Subrahmanya Iyer.
17. ,, G. C. Balasundaram.
18. ,, N. J. Pakianathan.

**Madrasa Islamia, Vaniyambadi**

19. Sri K. Abdul Quader Sahib. (H.M.)
20. ,, S. Abdul Khader.
21. ,, M. Md. Ghouse Khan.
22. ,, S. N. Ekambaram.

**Board High School, Chengam.**

23. Sri V. T. M. Thirunavukkarasu.
24. ,, K. Sundaresa Iyer.
25. ,, S. Arunachalam Pillai.
26. ,, A. N. Lakshmana Rao.
27. ,, T. Govindaraghavan.
28. ,, M. Jabanesan.
29. ,, S. Srinivasan.
30. ,, R. Narayana Pillai.

**Municipal High School, Tirupattur**

31. Sri P. Lakshminarayana (H.M.)
32. ,, M. Arunachala Gounder.
33. ,, T. S. Srinivasa Iyer.

**Panchayat Teachers' Union, Tiruvannamalai**

34. Sri V. C. Kaliyappan.
35. ,, D. Krishnaswami

**(Individual)**

36. Sri P. S. Krishna Rao, No. 11, Brahmin Street, Ambur.

### SOUTH ARCOT

**Municipal High School, Villupuram**

37 to 42. (Six delegates).

### BELLARY

**Board High School, Yemmiganur**

43. Sri B. Gururaja Rao (H.M.).

### CHITTOOR

**D. H. High School, Tirupati**

44. Sri M. S. Kotiswaran. (H.M.).
45. ,, N. Radhakrishna Iyer.
46. Sri K. Doraiswamy Iyengar.
47. ,, D. Sambasivayya Garu.
48. ,, R. Krishna Rao.
49. ,, N. Sundarachariar.
50. ,, V. Krishnamachariar.
51. ,, K. Narasimharaghavan,
52. ,, D. Ramiah Naidu.
53. ,, T. K. Subramaniam.
54. ,, T. K. Duraisamy Iyengar,
55. ,, K. Gopalayya.
56. ,, M. Seshachariar.
57. ,, C. Subramania Sarma.
58. ,, T. Varadadesikan.
59. ,, R. Srinivasaraghavachariar.

**Board High School, Kalahasti**

60. Sri A. S. Venkatraman.
61. ,, N. Venkatrami Reddy.
62. ,, A. Veeraswamy.

### COIMBATORE

**S. S. V. S. High School, Kodumudi**

63. Sri V. S. Venkateswara Iyer (H.M.)

**Nanjappa High School, Tiruppur**

64. Sri C. M. V. Jayendrachar,
65. ,, P. Subrahmanya Iyer,
66. ,, S. V. Subbarama Iyer.

**Board Middle School, Perundurai**

67. ......

### KURNOOL

**Municipal High School, Kurnool**

68. Sri G. Siva Rao.
69. ,, K. N. Pasupathi Iyer,
70. ,, S. Vaidyanatha Iyer.
71. ,, S. Srinivasamurthi.
72. ,, T. Venkoba Rao Gupta.
73. ,, K. China Subba Rao.
74. ,, E. S. Subbu Acharlu.

### MADRAS

**The Kellett High School, Triplicane.**

75. Rev. D. Thambuswami (Principal).
76. Sri N. Rajaratnam.

**St. Gabriel's High School, Broadway**

77. Sri S. Natarajan.

**Hindu High School, Triplicane**

78. Sri T. P. Srinivasavaradan.
79. ,, V. Srinivasan.
80. ,, N. Ramachandran.
81. ,, V. K. Sourirajan.

**P. S. High School,, Mylapore**

82. Sri C. S. Rajagopalan.
83. ,, V. Bhuvarahamurti Rao.

**P. S. Secondary School, Mylapore**

84. Sri K. Nagaraja Rao.
85. ,, K. S. Chandrasekharan.
86. ,, N. R. Atmanathan.
87. ,, V. Krishnamurthi Rao.

88. Sri M. S. Kachapeswara Sarma.
89. „ S. Lakshmikantham.

**Madras Caristian College, Tambaram**

90. Sri M. S. Sabhesan, M.A.

**T. T. V. High School, Sowcarpet**

91. Sri N. Krishnamachariar, 52, Mulla Sahib Street, G.T., Madras.
92. „ V. Rangaswamy Iyengar, (H.M.). 176, Mint St., G.T., Madras
93. „ A. Thambiran, Big Street, Barthipuram, Tiruvettipuram Post, North Arcot District.
94. „ M. Visvanathan, 22, Nainiappa Mudali St., Kosapet, Vellore.
95. „ K. Viraswami Naidu, 28, North Raja Street, Tiruvellore, Chingleput.
96. „ T. M. Doraiswamy Iyer, 19, Kottai Pillayar Koil Street, Saidapet
97. „ V. P. Thangavelu Mudaliar, 53. Ganta podikara St., Ambur, North Arcot District.
98. „ P. Ramanatha Iyer, c/o Sri T. S. Sabhapathi Iyer, Clerk, District Board Office, Vellore.
99. „ N. Ramaswami Iyengar, Chetty Street, Arnipalayam, Arni, North Arcot District.
100. „ K. S. Krishnaswami Iyengar, c/o Sri Srinivasa Iyengar, Document Writer, Rahimanpet, Vaniambadi, N. A. District.
101. „ C. S. Ramamritham Iyer, 30, Krishnan Naik Tank Street, G.T., Madras.

**Muslim High School, Triplicane**

102. Sri P. S. Ramaswami c/o Sri K. V. Narayana Iyer, Town Surveyor, Tiruvarur.
103. „ R. Mahadevan c/o Sri R. Krishnamurthi, Teacher, Ammayappan, Tanjore District.

**Sir M. Ct. M. C. High School, Purasawalkam**

104. Sri A. Tirumalai Iyengar, Vattavalam Zamindar House, Tiruvannamalai, N.A. District.
105. Sri N. Subrahmanyam, M.A., L. T., F.R.G.S., (Retired Vice-Principal, Teachers College), No. 13, West End Street, Gopalapuram, Cathedral Post, Madras.

**Hindu Theological High School, Madras**

106. Sri K. Rangaswami Iyengar, (H.M.)
107. „ R. S. Subramania Iyer.
108. „ C. V. Subramanya Iyer.
109. „ G. Mahadeviah.
110. „ P. A. Ramachandra Iyer.
111. „ C. V. Gopala Iyer.
112. „ C. S. Ramiah.
113. „ A. R. Srinivasa Iyer.
114. „ V. Y. Srinivasaraghavachariar.
115. „ S. Balakrishna Joshi.
116. „ M. Seetharam Guptha.
117. Sri T. S. Suryanarayana Iyer.
118. „ G. Sundaram Iyer.
119. „ R. Andi Iyer.
120. „ T. Sundarachari.
121. „ A. Subbaramiah.
122. „ S. Udayalinga Rao.
123. „ M. L. Narasimha Rao.
124. „ A. Venkatavaradachariar.
125. „ B. S. Venkatramiah.
126. „ P. G. Srinivasa Iyengar.
127. „ M. Sadasiva Iyer.
128. „ D. Venkatasubbiah.
129. „ A. Venkataramana Rao.
130. „ T. K. Malhari Rao.
131. „ J. Venkataramanadas.
132. „ D. Narasimhachariar.
133. „ Y. K. Krishnaswami Iyengar.
134. „ T. K. Padmanabha Sarma.
135. „ C. Yogosundaram Nayakar.
136. „ V. Narasiah.
137. „ K. Venkatasubramanyam.
138. „ T. R. Srinivasachariar.
139. „ S. Sampath Iyengar.
140. „ A. C. Arunachalam.
141. „ V. Ramachandra Iyer.
142. „ T. S. Ramaswami.
143. „ S. A. Ramakrishna Iyer.
144. „ S. Sundararaman.
145. „ N. Viswanathiah.
146. „ R. Padmanabha Rao.
147. „ A Seshasayee.
148. „ N. A. Rangachariar.
149. „ M. S. Venkatachariar.
150. „ S. Kandaswami Mudaliar.
151. „ E. S. Thyagaraja Desikar.
152. „ V. Lakshminarayana Sastriar.
153. „ Rani Seshadri Sastri.
154. „ S. R. Sundaresa Sarma.
155. „ P. V. Chalapathi Rao.
156. „ P. M. Chakravarthi Iyengar.
157. „ S Ramamurthi.
158. „ A. B. Gundachari.
159. „ K. Sitharamiah.
160. „ V. Ramamurthi Iyer.
161. „ K. M. Ranganathacharya.
162. „ C. Gurunathiah.

**Christian Literature Society, Madras**

163. Mr. A. N. Schwartz.

## MADURA

**Madura Teachers' Association**

164. Sri V. Aravamuda Iyengar.
165. „ K. R. Chandrasekharan.

**V. M. Board High and Elementary School Teachers Association, Bodinayakanur**

166. Sri A. S. Rajamanickam.
167. „ V. Sundaram Iyer.
168. „ G. Pethanan Asariar.
169. „ R. Venkatarama Iyer.
170. „ S. N. Krishna Iyer.

## RAMNAD

**N M. Board High School, Tirupattur**

171. ......

**Board High School, Kamuthi**

172. Sri P. S. Venkatachary.

**N. S. M. V. P. S. High School, Devakottai**

173. Sri V. S. Viraraghavan.
174. „ K. Gopalaswamy.
175. ......

**A. C. High School, Pallathur**

176. Sri G. A. Ramachandra Sastrigal.

**S. M. S. Vidyasala, Karaikudi**

177. to 187. (11 delegates).

**K. V. Sala High School, Virudunagar**

188. ......

## SALEM

**Kandar's School, Velur**

189. Sri N. P. Arumugam.
190. „ S. Natesa Iyer.
191. „ V. Kanakasabhai.

**G. H. M. High School, Salem**

192. Sri P. Venugopalachariar.

**Hosur Taluk Local Board Elementary School Teachers' Union, Thally**

193. ......

**Board High School, Krishnagiri**

194. Sri K. S. Chengalroya Iyer.
195. „ R. S. Subramania Iyer.
196. „ K. C. Jayarama Iyer.
197. „ C. Vasudeva Iyer.

**Board High School, Rasipuram**

198. Sri M. K. Swaminatha Iyer (H.M.)
199. „ A. Ayyaswami Iyer.
200. „ P. Somasundaram Chettiar.
201. „ V. Rajagopal Naidu.

**Board High School, Idappadi**

302. Sri D. Viraraghavan.
203. „ M. K. Margabandhu.

**Individual**

204. Sri V. Doraiswamy Iyer, Sahadevapuram, Extension, Salem.

## TANJORE

**Municipal High School, Mayavaram**

205. Sri K. V. Ganapathy.
206. „ S. Seshagiri Iyer.

**S. M. Hindu High School, Shiyali**

207. Sri R. Chokalinga Mudaliar.

## TRICHINOPOLY

**E. R. High School, Trichinopoly**

208. Sri S. T. Ramanuja Iyengar.

**N. C B. Aryan School, Trichy**

209. Sri S. S. Srinivasa Iyengar.

## TINNEVELLY

**Thirthapathy High School, Ambasamudram**

210. ......
211. ......

**Tinnevelly Guild**

212 to 221. (Ten delegates).

## ANANTAPUR

**L. M. High School, Gooty**

222. Sri C. Ranganatha Iyengar.

**Municipal High School, Anantapur**

223. Sri T. S. Rajagopala Iyer (H.M.)
224. „ V. Ramanathan.

---

**Municipal High School, Coimbatore**

225. Sri S. K. Subbarama Iyer.
226. „ Y. Srinivasa Iyer.
227. „ E. V. Singaravelu Mudaliar.

---


விலாச மாறுதல்

தென்னிந்திய ஆசிரிய சங்க காப்பு நிதி லிமிடெட்

இந்த ஆபீஸ் யுத்த நிலைமையை முன்னிட்டு கொஞ்சகாலத்திற்கு சென்னையிலிருந்து பஸார் ரோடு, விழுப்புரத்திற்கு 23—3—42-லிருந்து மாற்றப்பட்டிருக்கிறது. சந்தா செலுத்துபவர்கள் மணியார்டர் மூலமாகவோ அல்லது இண்டோ கமர்ஷியல் பாங்க் மூலமாகவோ மேல் கண்ட விலாசத்திற்கு அனுப்பவும். பாங்கின் ஒவ்வொரு பிராஞ்சிலும் மூன்று ரசீது கொண்ட பாரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

V. ஸ்ரீனிவாசன்,

காரியதரிசி

# செய்தித் திரட்டு

## சின்ன மோட்டூர் பஞ்சாயத்து பாடசாலை, திருப்பத்தூர் பெற்றோர் சங்க ஆண்டு விழா

இவ்விழா 9—3—42 அன்று நடைபெற்றது. பஞ்சாயத்து போர்டு உபதலைவர் ஸ்ரீ முனிசாமி ரெட்டியார் சங்கத்தின் கொடியை ஏற்றினார். ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ N. S. நரசிம்மம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். ஜோலார்பேட்டை போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ சின்னத்தம்பி நாயினார் அவர்கள் 'பெற்றோர்களும் பாடசாலையும்' என்பதுபற்றியும், உதவி ஆசிரியர் ஸ்ரீ சீனிவாசம் அவர்கள் 'பெண் கல்வி' என்பதுபற்றியும், உதவி ஆசிரியர் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள் 'சாரணீயம்' என்பதுபற்றியும் பெற்றோர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்கள். மாணவர்கள் 'பேராசை' என்பதைப்பற்றி ஒரு நாடகம் நடித்துக் காட்டினர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ லக்ஷ்மணன் வந்தனோபசாரம் கூறினார்.

---

## டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சை

7—3—42-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. வெங்கட்டராமய்யர் அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. தலைவர் புதிய புத்தகாலயத்தைத் திறந்து வைத்தார். இதற்கு இன்னும் பல புதிய புத்தகங்களை வாங்கிச் சேர்க்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் 'தாய்மொழி கற்பித்தல்' என்பதுபற்றி விரிவான சொற்பொழிவு செய்தார். காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

---

## ஹிந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

மார்ச்சு மாதத்தில் இப்பாடசாலையை காரைக்குடி நகராண் கழகத் தலைவரும், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அமைச்சரும் பார்வையிட்டனர். செங்கல்பட்டு சப் கலெக்டர் கபூர், ஐ. ஸி எஸ். அவர்களும் பார்வையிட்டு மாணவர்களின் குருகுல வாழ்க்கையைப் பற்றியும், ஆசிரியர்கள் குழந்தைகளுடன் அன்பாய் பழகுவதைப்பற்றியும் பாராட்டிப் பேசினர்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், அதமங்கோட்டை

இச்சங்கம் 14—3—42-ல் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் தலைமையில் கூடிற்று. ஸ்ரீமதி நடராஜனும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சதாசிவம் அவர்களும் விஜயம் செய்திருந்தனர்.

தலைவர் உரையில் சிறு பிள்ளைகளுக்கு விளையாட்டு மூலமாகவே கல்வி போதிக்கவேண்டுமென்றும், இளம் வயதிலேயே பாஷையை நன்கு கற்பிக்கவேண்டுமென்றும் உச்சரிப்பை அப்போதைக் கப்போது திருத்திப் பழக்கவேண்டுமென்றும் கூறினர். பிறகு பிள்ளைகளுக்கு கணக்கு எழுதுதல், ஞாபக சக்தியை விருத்தி செய்தல் முதலியவைகளைப் போதிக்கும் முறையை விளக்கிக் காட்டினர். உபாத்தியாயர்கள் உற்சாகத்தோடு உழைக்கவேண்டுமென்றும் தயாரிக்கவேண்டிய உபகரணங்களைப் பற்றியும் கூறினர்.

---

## பழனி தாலூகா ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகளின் யூனியன், சத்திரப்பட்டி

1942 ம் வருஷத்திய முதல் நிர்வாக சபைக்கூட்டம் 1—3—42-ல் கூடிற்று. அப்பொழுது காலஞ்சென்ற சில பிரபலஸ்தர்களுக்கு அனுதாபம் காட்டியும், ஜில்லா யூனியன் ஸ்தாபிக்கவும், யுத்தப்படிக்கும், பெண்கள் விகிதத்தை 12½ சத விகிதமாக்கவும், காஷுவல் லீவை 15 நாட்களாக்கவும், ஆரம்ப பாடசாலை S. T. T. C. ஆசிரியர்களை ஹைஸ்கூலில் புதிய காலி ஸ்தானங்களில் நியமிக்கும்படியும் கிராமங்களில் ராட்டைக் கழகம் ஏற்படுத்தவும் ஊர்காப்புக் கமிட்டிகளில் சேர்ந்துகொண்டு ஆரம்ப ஆசிரியர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## அரு. நடேசன் செட்டியார் உயர்தர ஆரம்ப பாடசாலை, சிவகங்கை

1—4—42-ல் இப்பள்ளிக்கூட பெற்றோர் சங்க ஆண்டுவிழா சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

அப்பொழுது வழக்கறிஞர் ஸ்ரீ K. ராஜசேகர பாண்டியன் அவர்கள் 'பெற்றோர் கடமை' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். மாணவர்கள் பல அபிநயப் பாடல்களாலும், நாடகங்களாலும் எல்லோரையும் மகிழ்வித்தனர்.

---

## ஹிந்து எலிமெண்டரி பாடசாலை, மாதவங்குரிச்சி பெற்றோர் சங்கம்

25—3—42-ல் இச்சங்கம், ஸ்ரீ கன்னிசெட்டி சேர்வை அவர்கள் தலைமையில் கூடிற்று. அனேகம் பெற்றோர்கள் வந்திருந்தனர். மாணவ மாணவிகள் பலவித நடிப்புகளால் எல்லோரையும் மகிழ்வித்தனர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ துரைசாமி அவர்கள் 'கல்வியின் அவசியம்' என்பதுபற்றியும், உதவி ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் அவர்கள் 'பெற்றோரின் கடமை' என்பதுபற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

## போர்டு ஆசிரியர்கள் யூனியன், திருவண்ணாமலை

29—3—42-ல் முனிசிபல் உயர்தர கலாசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ வரதராஜ முதலியார் அவர்கள் தலைமையில் கூடி இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆசிரியர் ஸ்ரீ நாராயண ரெட்டியாரால் 'ஒற்றுமை' என்பது பற்றி பேசப்பட்டது. தலைவர் முன்னுரையில் நமது அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள ஒற்றுமைச் சங்கங்கள் தான் மூலகாரணம் என்று கூறினார்.

பிறகு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்பு ஜில்லா ஆசிரியச் சங்க உதவி காரியதரிசி ஸ்ரீ காளியப்பன் அவர்கள், இந்த யூனியனை ஜில்லா சங்கத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்றும், நம் ஜில்லாவில் நடைபெறப்போகும் மாகாணக் கல்வி மகாநாட்டில் யாவரும் வரவேற்பு கமிட்டி அங்கத்தினராகச் சேர்ந்து திறம்பட நடத்த ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். தலைவர் முடிவுரையில் கடமையைச் சரிவரச் செய்தால் தொழிலில் மேன்மையை சம்பாதிக்கலாம் என்று விரிவாகப் பேசி முடித்தார்.

---

## பெற்றோர் சங்கம், போர்டு பாடசாலை, மீஞ்சூர்

29—3—42-ல் இச்சங்கக் கூட்டம் ஸ்ரீ கோபாலகிருஷ்ண முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. சுமார் 100 அங்கத்தினர்கள் ஆஜர்: சிறுவர் சிறுமிகள் கும்மி கோலாட்டம் முதலியனவால் நடித்து மகிழ்வித்தனர். பெற்றோர் சங்கத்தின் அவசியமும் அதன் கடமையும் என்பதுபற்றி ஸ்ரீ கோவிந்தராஜ- பிள்ளை, பாலசுந்தர முதலியார் முதலானவர்கள் பேசினார்கள்.

---

## அம்பாசமுத்திரம் தாலூகா, ஆரம்ப ஆசிரியர் சங்கம், சேர்மாதேவி

29—3—42-ல் நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் கூடிற்று. சங்க உபதலைவர் ஸ்ரீராமய்யர் அவர்கள் தலைமை வகித்தார். தீர்மானங்கள்.

1. 1941—42 மார்ச் மாதம் கொடுக்கப்பட்ட கிராண்டுகளில் அனேக பாடசாலைகளுக்கு இங்கிரிமெண்டு இல்லாமலும், சிலவற்றிற்கு $2\frac{1}{2}$ அல்லது 5 சதவீதம் கொடுக்கப்பட்டிருப்பதாலும், இது ஆசிரியர்களை மிகவும் பாதிப்பதாலும், அதிகாரிகள் கூடிய சீக்கிரம் இங்கிரிமெண்டு கிராண்டு தொகையை சப்ளிமெண்டு பில்மூலம் தருவித்துக் கொடுக்கும்படி ஜில்லா கல்வி அதிகாரியைக் கேட்டுக் கொள்ளுகிறது.

2, யுத்த நெருக்கடியால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை உத்தேசித்து மாதந்தோறும் கிராண்டு கொடுத்துதவுவதும் தவிர, ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ. 2 வீதம் படி சாங்க்ஷன் செய்யும்படியும் கேட்டுக் கொள்ளுகிறது.

3. யூனியன் மகாநாட்டை ஜூன் மாதம் நடத்தத் தீர்மானித்தது.

## உபாத்திமைச்சங்கம், ஆற்காட்டுப்பம்

4—4—42-ல் இச்சங்கத்தின் ஆண்டுவிழா திருத்தணி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. S. ராமசாமி அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ சற்குருதாஸ் என்பவர் 'பயம்' என்பதுபற்றியும் வித்துவான் ஸ்ரீ நாராயணராவ் என்பவர் 'நல்லாசிரியன்' என்பதுபற்றியும் சொற்பொழிவு செய்தனர்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், இடையக்கோட்டை

4—4—42-ல் இச்சங்கத்தின் இருபதாவது ஆண்டின் இரண்டாவது விழா நடைபெற்றது. காலைக்கூட்டம் மதுரை ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ நாராயணசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் கூடி புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள்.

1. வத்தலகுண்டு ஸ்ரீ B. S. சங்கரன் அவர்களின் அகால மரணத்திற்கு இச்சங்கம் அனுதாபம் காட்டுகிறது.

2. ஸ்ரீமதி இந்திரா நேருவுக்கும் ஸ்ரீ பிரோஸ் காந்திக்கும் நடந்த திருமணத்திற்கு மனமார்ந்த வாழ்த்துச் செய்திகளை தம்பதிகளுக்கு இச்சங்கம் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறது.

மாலைக்கூட்டத்திற்கு இடையக்கோட்டை ஜமீன்தார் ஸ்ரீ K சுப்ரமணிய லக்ஷ்மிபதி நாயக்கர் அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது

"தற்கால அரசியல் நிலைமை' என்பதுபற்றி ஸ்ரீ K. N. தாஸ் அவர்களும், "நிழல்படங்களின் உதவியால் சுகாதாரப் பிரசங்கங்களை" சுகாதார இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சிவராமகிருஷ்ண அய்யரும், "சரித்திரம்" என்பதுபற்றி ஜில்லாபோர்டு மெம்பர் ஸ்ரீ நாராயணசாமி செட்டியாரும், "ஆகாரப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்தல்" என்பதுபற்றி விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் ஸ்ரீ கணேசமூர்த்தியும் பிரசங்கங்கள் செய்தனர்.

தலைவர்களும் ஆசிரியர்களும் கொண்ட புகைப்படம் பிடிக்கப்பட்டது.

வெளியூர்களிலிருந்து வந்திருந்த ஆசிரியர்களுக்கு இடையக்கோட்டை ஜமீன்தார் விருந்தளித்தனர்.

[குறிப்பு.—இத்துடன் வந்த ஆண்டு அறிக்கையில் குறிக்கப்பட்டபடி "பாலர் கல்வி பத்திரிகையை ஒவ்வொரு ஆசிரியரும் படித்துப் பயன் பெற சாத்தியமாகும்படி சுற்றுப் பிரயாண திட்டம் ஒன்று ஏற்படுத்தி நடத்துவதை" நாம் வந்தனத்துடன் பாராட்டுகிறோம். இவ்விதம் ஒவ்வொரு ஆசிரிய சங்கமும் மேற்கொண்டால் இப்பத்திரிகையை விசேஷமாக விருத்தி செய்யக்கூடும். ஆசிரியர்கள் உதவி செய்வார்களாக.—பா்.]

---

# பத்திராபதிபர் குறிப்பு

## ஆசிரியர்களின் கடமை

சென்ற மாதத்தில் யுத்த பீதியைப்பற்றி எழுதியுள்ளோம். அப்பீதி குறையவில்லை. ஆனால் அதிகரித்து வருகிறது. துரைத்தனத்தாரே, சென்னைக்கு அபாயம் அதிகரித்துள்ளது என்றும் சென்னையில் வேலை இல்லாதவர்கள் சென்னையினின்றும் வெளியேறுவது உசிதம் என்று அறிக்கையிட்டுள்ளார்கள். தினந்தோறும் பல ஆயிரக் கணக்கான ஜனங்கள், ரயில், பஸ், படகு முதலிய மார்க்கங்களில் சென்னையினின்றும் வெளியேறி வருகிறார்கள். துரைத்தனத்தாரே, தங்களின் பல ஆபீஸ்களை ஜாக்கிரதையுடைய இடங்களுக்கு மாற்றிவிட்டனர். சென்னையிலுள்ள பள்ளிக்கூடங்களை யெல்லாம் மூடிவிடும்படி உத்திரவிட்டிருக்கின்றனர்.

இன்னிலையில் ஆசிரியர் கடமை யென்ன? A.R.P. வேலைக்காக சிலர் தங்கள் பள்ளிக்கூடத்தில் இருக்கவேண்டி யிருக்கின்றது. பல ஆசிரியர்கள் சென்னையை விட்டு வெளியேறிவிட்டனர். சென்னையினின்றும் வெளியேறிய ஜனங்களில் பலர் கிராமங்களையே அடைந்துள்ளனர். இப்போரில் நகரங்களுக்கே அபாயம் அதிகமாயுள்ளது. கிராமங்களுக்கு அபாயம் அவ்வளவு இல்லை என்று சொல்லலாம். கிராம புனருத்தாரண வேலையை நடத்த முயலுவதும் ஆசிரியர்களின் கடமையாகும். ஆசிரியர்கள், பள்ளியில் வரும் மாணவர்களுக்குத் தான் கல்வி கற்பிப்பது என்று கருதக் கூடாது. இப்பொழுதிருப்பது போன்ற அமைதியற்ற நிலையில் ஆசிரியர்கள் சமூக தொண்டு செய்வது ஒரு உயர்தர ஊழியமாகும். அமைதியற்று கலக்கமுள்ள காலத்தில் பாலர்களுக்கு கல்விகற்கும் வசதிகளில்லாவிடில் பாலர்களின் பிற்கால வாழ்க்கை சீர்குலைந்துவிடும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகவே சென்னையிலிருந்து வெளியேறிய ஆசிரியர்கள் தம் தம் கிராமத்தில் தஞ்சம் புகுந்த பாலர்களுக்கு தகுந்த கல்வி கற்பிக்கும் திட்டங்களை ஏற்படுத்துவது சிறந்த தொண்டாகும். ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள ஜில்லா ஆசிரியர் சங்கங்களின் நிர்வாக சபையினர் இவ்விஷயத்தை ஆலோசித்து யுத்த பீதியுள்ள இடங்களிலிருந்து வெளியேறிவரும் பாலர்களின் கல்விக்குத் தகுந்த ஏற்பாடு செய்ய முன்வருவார்கள் என்று கருதுகிறோம்.

நமது புதிய பிரசுரங்கள்

**பூவர்ணனை** BY N. சுப்ரஹ்மண்ய அய்யர், M.A., L.T., & K. ராமமூர்த்தி, M.A., L.T., (Dip. Geo.)

புதிய பாட திட்டத்தை ஒட்டியது.

நான்காம் வகுப்புக்குரியது .... விலை அணா 7.

ஐந்தாம் வகுப்புக்குரியது .... விலை அணா 8.

I, II, III பாரங்களுக்குரியது விலை அணா 10; அணா 12; அணா 12.

**அங்க கணிதம்** BY S. ராதாகிருஷ்ண அய்யர், B.A., & K. வைத்தியனாதஸ்வாமி அய்யர், B.A.,

அவர்களால் எழுதப்பட்டதை

புதிய பாட திட்டத்தை முழுதும் தழுவி

S. ராஜமைய்யர், B.A., L.T., அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

**Book I for Form I 0—10—0; Book II for Form II 0—12—0**
**Book III for Form III 0—12—0**

**P. வரதாச்சாரி அண்டு கம்பெனி**

நெ. 8, லிங்கி செட்டித் தெரு, சென்னை

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
முத்திரை
ரிஜிஸ்டர் நெ. 1506

# அசோகா சுகந்த பர்க்கு தூள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி,

அசோகா பாக்டரி,

கோயமுத்தூர்.

*Regd. No. M. 3473*

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRA

BAZAAR ROAD, VILLUPURAM.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள்:

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள்:

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு ... | | ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினுல், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

Printed by L. Raghuraja Bharati at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.